சக்தி மலர்

ஏ. கே. செட்டியார்

# பிரயாண நினைவுகள்

15371

ஸ்ரீ ஏ. கே. செட்டியார் ஒரு பிரயாணி. பிரயாணத்தை அநுபவிக்கிறவர். தமது அநுபவத்தைப் பிறர்க்கு உற்சாகம் உண்டாக்குமாறு சொல்வதிலே கைதேர்ந்தவர். ஏற்கனவே "ஜப்பான்", "உலகம் சுற்றும் தமிழன்", "அமெரிக்கா" ஆகிய நூல்களை எழுதியிருக்கிறார். இவருடைய நூல்களைப் படிக்கிறபோது, நாமும் இவரோடு கூடவே பிரயாணம் செய்யவேண்டுமென்ற ஆசை ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் உண்டாகும். அந்த ஆசை வளருமானால் தமிழ் நாடு நிச்சயம் வளரும்.

MAHAMAHOPADHYAYA

# பிரயாண நினைவுகள்

☆

ஏ. கே. செட்டியார்

☆

சக்தி காரியாலயம்

மதுரை :: காரைக்குடி

முதற்பதிப்பு அக்டோபர் 1942

சகல உரிமைகளும்
சக்தி காரியாலயத்தாருக்கே

சக்தி பிரஸ் லிமிடெட், காரைக்குடி

## பதிப்புரை

சக்தி மலர்களிலே இது நான்காவது பிரயாண நூல்.

தங்கள் பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகளை இந் நூலில் சேர்த்துக் கொள்ள அனுமதியளித்த 'கல்கி', 'ராஷ்ட்ரவாணி', 'கலைமகள்', 'ஹிந்துஸ்தான்', 'சக்தி' ஆசிரியர்களுக்கு எங்கள் நன்றி உரியதாகும்!

தமிழ் நாட்டார் பிரயாண நூல்களுக்குக் காட்டிவரும் ஆதரவுதான், இந் நூலையும் வெளியிடும்படி எங்களைத் தூண்டிற்று.

★

**சக்தி காரியாலயத்தார்.**

## பொருள் அடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பிரயாண நினைவுகள் | ... | 1 |
| 2. | ரோமெய்ன் ரோலந்து | ... | 8 |
| 3. | உலகில் அழகிய பாரிஸ் | ... | 12 |
| 4. | பெர்லின் நகரில் | ... | 19 |
| 5. | ரங்கூன் பிரயாணம் | ... | 26 |
| 6. | பம்பாயில் கண்டவை | ... | 34 |
| 7. | ரெயில் பிரயாணம் | ... | 41 |
| 8. | பீஜப்பூர் | ... | 48 |
| 9. | கோவா | ... | 54 |
| 10. | செஞ்சிப் பிரயாணம் | ... | 61 |
| 11. | தரங்கம்பாடி | ... | 68 |
| 12. | குமரி முனை | ... | 73 |

# பிரயாண நினைவுகள்

அமெரிக்காவில் சில காலம் தமிழே பேச வகையறியாமல் தவித்துக் கொண்டிருந்தேன். நாலைந்து மாதங்கள் நீங்கள் தமிழையே பேசவில்லையென்றால் உங்கள் நிலைமை எப்படியிருக்கும்? சில சமயங்களில் எனது அறையை நன்றாகத் தாளிட்டுவிட்டு, ஏதாவது தமிழ்ப் புத்தகத்தையோ பத்திரிகையையோ எடுத்துக் கொண்டு உரக்கப் படிப்பேன்.

ஒரு நாள் எனது தாயாருக்குக் கடிதம் எழுதி அதைத் தபாலில் சேர்க்கச் சென்றேன். வழியில் ரிகார்டிங் கம்பெனியொன்று கண்ணுக்குத் தென்பட்டது. ஒரு பக்கம் ரிகார்டு செய்வதற்கு ஒன்றரை ரூபாய் தான் கட்டணம். உடனே அங்கே சென்றேன். தமிழிலே பேசி ஒரு ரிகார்டு எடுத்துக்கொள்வது என்று நிச்சயித்தேன். அதை நினைக்கையிலேயே எனக்கு உற்சாகமுண்டாயிற்று. "அன்புள்ள அன்னையே, இப் புதிய ஆண்டின் உதயத்தில், பத்தாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள அமெரிக்க நாட்டிலிருந்து எனது வணக்கத்தைத் தெரிவிக்கிறேன்" என்று ஆரம்பித்தேன். ஐந்து நிமிஷத்தில் ரிகார்டு தயாராகிவிட்டது. அந்த ரிகார்டைக் கேட்டபொழுது எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. எனது முரடான குரலே எனக்குத் தெரியவில்லை. குரல்

எப்படியிருந்தாலென்ன? ஓசை தமிழ் தான். தமிழனுக்குத் தமிழைவிட இனிமை வேறுண்டோ?

*    *    *

ஆயிரக் கணக்கான புத்தகங்களை அடுக்கிவைத்திருக்கும் அழகைப் பார்த்துக் கொண்டிருப்பதிலே எனக்கு ஆசை உண்டு. பொழுது போகாத நேரங்களிலே புத்தகக் கடைக்குச் செல்வேன். டோக்கியோவில் 200 பழைய புத்தகம் விற்கும் கடைகள் ஒரே வரிசையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்கு லட்சக் கணக்கான புத்தகங்கள் வைத்திருக்கிறார்கள். இவைகளிலே **'ஆங்கில ஆசான்'** புத்தகமொன்றும் காணப்பட்டது.

இங்குள்ளவர்களுக்குப் பெரும்பாலும் ஆங்கிலம் தெரியாது. ஆங்கிலப் புத்தகங்களின் அருமையும் தெரியாது. புத்தகங்களை எடைபோட்டு விற்கும் புதுமை இந்த நாட்டில்தான் உண்டு. பெர்னார்டு ஷா எழுதிய சிறந்த சிறிய புத்தகமொன்று நான்கணுவுக்குக் கிடைத்துவிடும். ஆனால் கிழிந்துபோன பழைய சேம்பர்ஸ் டிக்ஷனரிக்கு ஐந்து ரூபாய் கொடுக்க வேண்டும்.

*    *    *

கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆயிற்று என்பார்கள். இப்பழமொழி நாணய மாற்றுதலுக்கு மிகவும் பொருந்தும். ஒரு ரூபாய் நாணயத்தை பத்துப் பதினைந்து நாடுகளில் மாற்றினால் அது அரை ரூபாய் ஆகிவிடும். இப்படி மாற்றிக் கொண்டே போனால் கடைசியில் ரூபாயே மறைந்துவிடும். நாணயத்தை மாற்றும் பொழுது வியாபாரிகளின் நாணயமே மாறிவிடுகிறது.

ஷாங்காயில் ஒரு காலத்தில் சிறிய பணம், பெரிய பணம் என்று இரண்டிருந்தது. ஒரு ஷாங்காய் டாலருக்கு 300 காப்பர்கள். ஒரு காப்பர் என்பது காலணு நாணயம் அளவில் இருக்கும். ஒரு டாலருக்குச் சில்லறை மாற்றும் பொழுது 240 காப்பர்களை ஒரு கடைக்காரன் என்னிடம் கொடுத்தான். ஒரு டாலருக்கு இவ்வளவு சில்லறையா என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டே கப்பலுக்குச் சென்றேன். கப்பலிலுள்ள ஒரு நண்பரிடம் எனக்கு வாய்த்த அதிருஷ்டத்தைக் குறித்துப் பெருமையோடு கூறினேன். அதற்கவர் "அட பாவமே! உங்களை அறுபது காப்பர்கள் ஏமாற்றி விட்டானு?" என்ருர்.

* * *

சமீபத்தில் ரங்கூன் சென்றிருந்தபொழுது ஒரு சம்பவம் நிகழ்ந்தது. பிலிம் கம்பெனி முதலாளி ஒருவர், தமது படத்தை மறுநாள் காலை எட்டரை மணிக்கு தமது சினிமாக் கொட்டகையில் எனக்கு மட்டும் காட்ட ஏற்பாடு செய்வதாகவும், பிறகு எனக்கு டெலிபோன் மூலம் தகவல் தெரிவிப்பதாகவும் கூறினர். அவர் எனக்குத் தெரிவிக்க மறந்து விட்டபோதிலும் அந்த சினிமாக் கொட்டகை ஆப்பரேட்டருக்கு மட்டும் தகவல் தெரிவித்து விட்டார்.

மறுநாள் காலை சரியாக எட்டரை மணிக்கு ஆப்பரேட்டர் சினிமாக் கொட்டகையின் எல்லாக் கதவுகளையும் தாழிட்டுவிட்டு முதலாளியின் உத்தரவுப்படி படத்தை ஆரம்பித்து விட்டான். கொட்டகையில் ஆப்பரேட்டரைத்தவிர வேறு யாருமேயில்லை. படம் மட்டும் ஓடிக்கொண்டிருந்தது!

அன்றையதினம் ஒன்பதரைமணிக்கு இந்த பிலிம் கம்பெனி முதலாளி ஆபீசுக்குச் சென்றேன். அவர் என்னைப் பார்த்ததும், 'உங்களுக்காக இன்று படம் ஓடுகிறது' என்றார். "எனக்காகவா?" என்றேன். அவருக்குத் தூக்கி வாரிப் போட்டு விட்டது. "என்ன நீங்கள் இல்லாமலா உங்களுக்குப் படத்தை காட்டுகிறார்கள்" என்று கூறிவிட்டு சினிமாக் கொட்டகைக்குப் படத்தை நிறுத்தும்படி டெலி போன் செய்தார்.

*   *   *

நியூயார்க் நகரில் மாணவர்கள் விருந்து ஒன்றில் கலந்துகொண்டேன். அந்த விருந்தில் மாணவர்களே பரிமாறினார்கள். அங்குக் கூடியிருந்த மாணவர்கள் 52 தேசங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் எந்த நாட்டினரென்று ஒரு அச்சடித்த காகிதத்துண்டை குத்திக்கொண்டிருப்பதென்று ஒரு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

எனது மேஜையில் ஒரு குறும்புக்கார கிரேக்கப் பெண் உட்கார்ந்திருந்தாள்.

ஒவ்வொரு பாஷையிலும் வந்தனம் என்ற வார்த்தையைக் கற்றுக்கொள்வது எனது வழக்கம். அந்த கிரேக்க பெண்ணைப் பார்த்து "வந்தனம்" என்பதற்கு கிரேக்க பாஷையில் எப்படிச் சொல்வது என்றேன். அதற்கவள் **பியினே பினிக்ஸ்** என்று கூறினாள்.

ஒரு கிரேக்க மாணவன் எனக்குப் பரிமாறிய பொழுது, அவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே, மிகுந்த அன்போடு 'பியினே பினிக்ஸ்' என்றேன். அவன் முகம் சட்டென்று மாறிவிட்டது. அவன்

என்னிடம் காதோடு காதாக "இனி இம்மாதிரி வார்த்தையைக் கூருதே. பியினே பினிக்ஸ் என்ருல் "குளத்தில் விழு" என்று அர்த்தம். இந்தத் தடவை உன்னை மன்னித்து விடுகிறேன்" என்ருன்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்து இரண்டு வருடங்களுக்குப் பிறகு பாரிஸுக்குச் சென்றேன். இந்த கிரேக்கப் பெண் பாரிஸில் படித்துக் கொண்டிருந்தாள். என்னை வரவேற்பதற்காக ஸ்டேஷனுக்கு வந்திருந்தாள். அவளைக் கண்டதும் நான் முதலில் கூறிய வார்த்தை என்ன தெரியுமா?

'**பியினே பினிக்ஸ்!**'

* * *

வெந்நீர் மழையை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அல்லது அதைப் பற்றியாவது கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

ஹாலிவுட்டில் ஒரு ஸ்டுடியோவுக்குச் சென்ற பொழுது, மழையில் நடக்கும் காட்சியொன்றைப் படம் பிடித்தார்கள். ஹாலிவுட் டைரக்டர்களுக்கு நினைத்த பொழுது மழை பெய்யவேண்டும். இதற்காக ஸ்டுடியோக் காரர்கள் ஏராளமான தண்ணீர் டாங்குகளை அமைத்து, அதை மின்சார விசையால் இணைத்து தேவையானபொழுது மழை கொட்டும்படி ஏற்பாடு செய்திருக்கிருர்கள்.

மழை "சோ" என்று பெய்கிறது. நடிகர்கள் குளிரால் நடுங்குகின்றனர். டைரக்டர் உத்தரவிடுகிருர். படம் பிடிக்கப்படுகிறது.

என்னை அழைத்துச் சென்ற நண்பர், "இதோ மழை பெய்கிறதே, இது தண்ணீர் அல்ல; வெந்நீர்" என்ருர். அவரை ஆச்சரியத்தோடு நோக்கினேன்.

மேலும் அவர் "தண்ணீர் மழையாயிருந்தால் சில நட்சத்திரங்களுக்கு ஜலதோஷம் பிடிக்கலாம். அப்படி நேர்ந்தால் சில நாட்கள் படம் பிடிப்பதை நிறுத்தவேண்டியிருக்கும். படம் பிடிக்காத ஒவ்வொரு நாளும் ஸ்டுடியோக்களுக்கு பல ஆயிர டாலர்கள் நஷ்டம். அதனால்தான் சொற்ப செலவில் வெந்நீர் மழை கொட்டுகின்றனர்" என்றார்.

இந்த வெந்நீர் மழைகூட எனக்கு அவ்வளவு ஆச்சரியமாகத் தோன்றவில்லை. ஆனால் இந்த வெந்நீர் மழையில், குளிரில் நடுங்குவதைப் போல நடிகர்கள் நடித்தார்களே, அதுதான் எனக்கு மிக ஆச்சரியமாயிருந்தது.

* * *

இரங்கூன் எக்ஸெல்ஸியர் தியேட்டரில் உதய சங்கரின் நடனம். உதய சங்கர் நடனம் என்றால் கேட்பானேன்? ஏராளமான கூட்டம். தியேட்டரிலுள்ள நாற்காலிகளின் எண்ணிக்கைக்கு மேலாகவே டிக்கட் விற்று விட்டார்கள்.

ஒரு நாற்காலியிலுட்கார்ந்திருந்த வங்காளி இளைஞர் ஒருவர், ஏதோ ஒரு வேலையாக தியேட்டரின் ஒரு புறத்தேயுள்ள வராந்தாவுக்குச் சென்றார். அவர் சென்றதுதான் தாமதம். புதிதாக வந்த ஒருவர் அந்த நாற்காலியில் உட்கார்ந்தார்.

சிறிது நேரம் கழித்து அந்த வங்காளி இளைஞர் திரும்பிவந்த பொழுது, தன்னுடைய நாற்காலியில் வேறொருவர் வந்து உட்கார்ந்திருப்பதைப் பார்த்தார். எவ்வளவோ கூறியும் அவர் நகருவதாகக் காணோம். சண்டை வலுத்தது.

நாற்காலியில் உட்கார்ந்திருந்தவர், அந்த இளை ஞரைப் பார்த்து "உமக்கென்ன வேண்டும்" என்றார்.

"எனக்கு நீர் உட்கார்ந்திருக்கும் இடம் வேண்டும்" என்றார் இளைஞர்.

"இடம் தானே வேண்டும். வேறொன்றும் வேண்டாமே!" என்றார் உட்கார்ந்திருந்தவர்.

"எனக்கு இடந்தான் வேண்டும்" என்றார் இளைஞர்.

உடனே, உட்கார்ந்திருந்தவர் எழுந்து தமது நாற்காலியைத் தூக்கி தியேட்டர் சுவரின் ஓரத்தி லுள்ள வேறு இடத்தில் போட்டுக்கொண்டு உட் கார்ந்தார். அவர் அந்த வங்காளி இளைஞரைப் பார்த்து "நண்பரே, தங்கள் இடம் காலியாயிருக் கிறது. அன்பு கூர்ந்து தாங்கள் உபயோகித்துக் கொள்ளலாம்" என்றார். அந்த வங்காளி இளைஞ ரின் முகத்தைப் பார்த்து, சிலர் அனுதாபப் பட் டனர்; சிலர் நகைத்தனர்.

## 2. ரோமெய்ன் ரோலந்து

ரோமெய்ன் ரோலந்து சிறந்த பிரெஞ்சு அறிஞர். உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர்களில் ஒருவர். நோபல் பரிசு பெற்றவர். மகாத்மாவின் வாழ்க்கைச் சரிதையை எழுதி முதன் முதலில் வெளிநாடுகளில் பரப்பியவர் இவர்தான். எனவே, மகாத்மாவைப் பற்றி இவ் அறிஞரின் கருத்தை எங்கள் டாகுமெண்டரி சினிமாப் படத்தில் எடுத்துச் சேர்க்கவேண்டுமென்று தீர்மானித்தேன்.

வருடத்தில் ஆறு மாதம் ஜினிவாவுக்கு அருகிலுள்ள வில்லிநாவ் எனுமிடத்திலும், ஆறு மாதம் பிரான்ஸ் தேசத்தில் வெஸிலே எனும் கிராமத்திலும் ரோமெய்ன் ரோலந்து வசிக்கிறார். இவருக்கு ஆங்கிலம் தெரியாது. இவருடைய மனைவியும் சகோதரியும் ஆங்கிலம் பேசுவார்கள்.

முதலில் வில்லிநாவுக்குக் கடிதம் எழுதினேன். ரோமெய்ன் ரோலந்து வெஸிலேயி லிருப்பதாகவும், அங்குக் கடிதம் எழுதும்படியும் ரோமெய்ன் ரோலந்தின் சகோதரி பதில் எழுதினாள்.

* * *

வெஸிலேக்கு ரெயில் கிடையாது. ஊருக்கு எப்படிச் செல்ல வேண்டுமென்று பாரிஸிலுள்ள முக்கியமான பிரயாண ஏஜெண்டுகள் அனைவரையும் கேட்டேன். யாருக்குமே தெரியவில்லை. பிறகு

'எக்ளேர்' ஸ்டுடியோவிலுள்ள ஒரு நண்பர் சுமார் இரண்டு மணி நேரம்வரை ஏராளமான டைரக்டரி களைப் புரட்டி, கடைசியாக அந்நகர் அவல்லான் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 16 மைல் தூரத்திலிருக் கிறதென்று கூறினர். பாரிஸிலிருந்து சுமார் 200 மைல்.

வெஸிலே, குன்றின் மேலமைந்த ஒரு குக்கிரா மம். குன்றின் உச்சியிலே புராதனப் பெருமை வாய்ந்த கிறிஸ்து ஆலயம் ஒன்றிருக்கிறது. இங்கு தினந்தோறும் பல யாத்திரிகர்கள் வருகின்றனர். தேவாலயத்துக்குச் செல்லும் வழியில் இயற்கை வனப்புள்ள ஒரு அழகிய தோட்டத்தினிடையே இருக்கிறது ரோமெய்ன் ரோலந்தின் வீடு.

கதவைத் தட்டினேன். வயதுமுதிர்ந்த வேலைக் காரக் கிழவி ஒருத்தி கதவைத் திறந்து, புலித்தோல் விரிக்கப் பெற்ற ஒரு அறையில் உட்காரும்படி கூறினள். சிறிது நேரத்திற்கெல்லாம் ரோமெய்ன் ரோலந்தின் மனைவி அவ்வறைக்கு வந்து, என்னை வரவேற்று உபசார வார்த்தைகள் கூறினள்.

ரோமெய்ன் ரோலந்து காலை முழுதும் பூஜை செய்வார் என்றும், மாலையில்தான் அவரைப் பார்க்க லாம் என்றும் சொல்லி, நான் தங்குவதற்காக அருகி லுள்ள ஒரு ஹோட்டலில் ஏற்பாடு செய்தாள்.

* * *

மாலையில் மீண்டும் சென்றேன். ரோமெய்ன் ரோலந்தைச் சந்தித்தேன். பிரெஞ்சு பாஷையில் தான் பேசினர். அவருடைய மனைவியே எங்க ளுடைய சம்பாஷணைகளை ஒருவருக்கொருவர் மொழி பெயர்த்துச் சொன்னள்.

ரோமெய்ன் ரோலந்தைச் சந்தித்த உடனேயே, என்னை யறியாமல், அவரிடத்தில் எனக்குப் பெரு மதிப்பு உண்டாயிற்று. "காந்தி, நேரு, தாகூர் முதலியோர் சௌக்கியமா?" என்று அவர் கேட்டார். இந்தியாவின் ஒப்பற்ற இவ்வரும் தலைவர்கள் சௌக்கியமா யிருக்கிறார்கள் என்று ரோமெய்ன் ரோலந்திடம் பதில் சொல்லும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

படத்தைப்பற்றிய விவரங்களை எல்லாம் ரோமெய்ன் ரோலந்து ஆவலுடன் விசாரித்தார். "நீங்கள் செய்யும் காரியம் மிகவும் நல்லது. இதற்கு அடுத்தபடியாக சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையைப் படம் பிடித்தால் மிக நன்றாயிருக்கும்" என்றார்.

அவர் என்னிடம் பேசப் பேச அவர் சந்தித்த இந்தியர்களைப்பற்றிய நினைவுகள் எல்லாம் அவருக்கு வந்தன.

"பாவம்! லஜபதிராய் இறந்துவிட்டார். அவரைப்போன்ற கம்பீரமான இந்தியரை நான் பார்த்ததே கிடையாது" என்றார்.

பிறகு காலஞ் சென்ற ஜே. ஸி. போஸைப்பற்றியும், அப்பொழுது காங்கிரஸ் தலைவராயிருந்த சுபாஷ் சந்திர போஸைப் பற்றியும் பல விஷயங்களைக் கூறினார்.

* * *

இவை எல்லாம் முடிந்ததும் தேனீர் அருந்தினோம். அப்பொழுது மகாத்மாவின் படத்தில் அவருடைய அபிப்பிராயத்தைக் கூறவேண்டுமென்று கேட்டேன். "நான் பேசுகிறேன். நீங்கள் ஒலியை

வேண்டுமானால் பதிவு செய்யுங்கள். ஆனால் தயவு செய்து எனது படத்தை மட்டும் எடுக்காதீர்கள். நான் படத்தில் விகாரமாய்த் தோன்றுவேன்" என்றார்.

"உங்களைப்பற்றி இந்தியர்கள் மிகவும் கேள்விப் பட்டிருக்கிறார்கள். நீங்கள் காந்திஜீயைப்பற்றி எழுதிய புத்தகம் இந்தியாவில் பல பாஷைகளில் மொழி பெயர்க்கப் பெற்றிருக்கிறது. உங்களுடைய படத்தைப் பார்க்க இந்தியர்கள் பெரிதும் மகிழ்ச்சியடைவார்கள்" என்று கூறினேன். பிறகு அவருடைய மனைவியிடம் எனது வேண்டுகோளை வற்புறுத்துமாறு கேட்டுக்கொண்டேன். அம்மையார் கடைசியாக வெற்றிபெற்றார். உடனே பாரிஸுக்கு டிரங்க் டெலிபோன் செய்தேன். மறுநாள் சார்லஸ் மாட்டீன் என்ற பிரபல செய்திப்படக் காமிராக்காரர், காமிரா, ஒலிப்பதிவு டிரக் முதலியவற்றுடன் வந்து சேர்ந்தார்.

ரோமெய்ன் ரோலந்து இரு முறை பேசினார். இரண்டையும் ரிகார்டு செய்தோம். பிறகு அவரிடம் விடைபெற்றுப் பாரிஸுக்குச் சென்றேன்.

இந்த பிலிம் பாரிஸிலுள்ள ஒரு லெபோரட்டரிக்குச் சென்றது. இதை டெவலப் செய்து தகவல் தெரிவித்து அனுப்புவதற்குள் யுத்தம் ஆரம்பமாகி விட்டது. ஸ்டுடியோக்களையும் லெபோரட்டரிகளையும் மூடிவிட்டனர். கடைசியாக மிகப் பிரயாசையின் பேரில் ரோமெய்ன் ரோலந்து பேசியதன் பெரும் பகுதி பிலிம் கிடைத்தது. இன்னொரு சிறு பகுதி டெவலப் ஆகாமலே இன்னும் பிரெஞ்சு தேசத்தில் இருக்கிறது. எங்களுக்குக் கிடைத்த பெரும் பகுதி எதுவோ, அதைத்தான் நீங்கள் மகாத்மா காந்தி படத்தில் பார்த்தீர்கள்.

# 3. உலகில் அழகிய பாரிஸ்

உலகத்திலுள்ள மிக அழகான நகரம் பாரிஸ்.

உலக அற்புதங்களில் ஒன்ருன ஈபெல் (Effel) கோபுரத்தையுடைய நகரம் பாரிஸ்.

சகல கலைகளிலும் சிறப்புற்று விளங்கும் நகரம் பாரிஸ்.

நிற வேற்றுமையே யில்லாத நாகரிகமான நகரம் பாரிஸ்.

அந்நிய நாட்டு யாத்திரிகர்களின் மெக்காவாக விளங்கும் நகரம் பாரிஸ்.

எத்தனை முறை சென்ருலும் தெவிட்டாத நகரம் பாரிஸ்.

மேனுட்டுப் பெண்களின் உடையிலே தினந்தோறும் புதிய புதிய பாஷன்களை உண்டாக்கும் நகரம் பாரிஸ்.

கேளிக்கைகளுக்கும் களியாட்டங்களுக்கும் உலகப் பிரசித்தி பெற்ற நகரம் பாரிஸ்.

1939-ஆம் ஸ்ரீ ஜுலை மாதத்து இரவில், பத்தரை மணிக்கு, ரெயில் பாரிஸ் நகரத்தை யடைந்தது. அமெரிக்காவில் என்னுடன் தங்கி யிருந்த ஒரு கிரேக்க மாணவர் என்னை வரவேற்பதற்காக ஸ்டேஷனுக்கு வந்திருந்தார். சாமான்களை எடுத்துக்கொண்டு, மாணவர்கள் வசிக்கும் லட்டீன் குவார்ட்டர் என்ற பகுதியிலுள்ள ஒரு ஹோட்டலுக்குச் சென்ருேம். வாடகை மோட்டாரின் மீட்டரைப் பார்த்ததும் திகிலடைந்தேன்.

அந்த பிரெஞ்சு டிரைவர் அரை குறையான ஆங்கிலத்தில் " இரவு பதினெரு மணிக்கு மேல் இரட்

டிப்புக் கட்டணம்" என்ருன். எவ்வளவு கட்டணம் கொடுக்கிருேமோ அதில், குறைந்தது நூற்றுக்குப் பத்து வீதம் இனும் கொடுப்பது அந்த நாட்டு வழக்கம். எனவே, கட்டணத்தையன்றி டாக்ஸி டிரைவருக்கும் 'இரட்டிப்பு இனம்' கொடுக்கும்படி நேர்ந்தது.

மறு நாள் காலையில் எனது வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினேன். பாரிஸ் நகரத்துப் படத்தை வைத்துக் கொண்டு, எந்தெந்த பஸ் எந்தெந்தப் பக்கம் செல்கிறது என்பதைக் குறித்துக் கொண்டேன். பாரிஸ் நகரத்து பஸ்களில் முதலாவது இரண்டாவது வகுப்புக்கள் இருக்கின்றன.

சாதாரணமாக, நமது சென்னை நகரத்தில் ஒரு பஸ் நிற்குமிடத்தைப் பாருங்கள். அரை மணி நேரம் நாம் பஸ்ஸுக்காகக் காத்து நிற்கும்பொழுது, பஸ் வந்ததும், எங்கே யிருந்தாவது ஓடிவரும் சில 'முரடர்கள்' நம்மை இடித்துத் தள்ளி விட்டு, தாங்கள் முதலில் ஏறிக் கொள்வார்கள். பெண்களும் குழந்தைகளும் உள்பட மற்றவர்கள் வெகு நேரமாகக் காத்துக் கொண்டு நிற்கிருர்களே என்ற எண்ணம் இவர்களின் மூளைக்கு எட்டாது. இவர்களிற் பலர் ஐரோப்பிய நாகரிகத்தில் தோற்ற மளிக்கிருர்களே என்று நினைக்க வேண்டாம். இவர்களுடைய 'தன்மை' அவ்வளவு தான்.

ஆனல், பாரிஸில் இம்மாதிரி யல்ல. பஸ் நிற்கும் இடங்களிலெல்லாம் அங்குள்ள ஓர் இரும்புத் தூணில் இரும்புப் பெட்டி ஒன்று வைத்திருப்பார்கள். வரிசைக் கிரமமாக நம்பர் அச்சிட்ட ஒரு டிக்கட் சுருள் அதில் இருக்கும். ஒரு டிக்கட்டைக் கிழித்தால், மறு

டிக்கட்டின் ஒரு பகுதி தானே வந்து நிற்கும். ஒவ்வொரு பிரயாணியும் ஒவ்வொரு டிக்கட் கிழித்துக் கொள்ள வேண்டும். இதற்குப் பணம் ஒன்றும் கிடையாது. ஏனெனில், பஸ் ஸ்டாண்டுக்கு யார் முன்னே வந்தார்கள் என்பதைக் காட்டுவதற்காக இந்த டிக்கட் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. மோட்டார் பஸ்ஸில் இடமிருந்தால், இந்த டிக்கட்டைக் காட்டாமலே எல்லோரும் ஏறிக் கொள்ளலாம். ஆனால், கூட்டம் அதிகமா யிருந்தால், டிக்கட் நம்பர் பிரகாரம், யார் யார் முன்னால் வந்தார்களோ அவர்கள் தான் ஏறிக் கொள்ளலாம்.

மிகவும் குறைவான கட்டணமுள்ள போக்குவரத்துச் சாதனம், பூமிக்குக் கீழ் ஓடும் 'மெட்ரோ' என்னும் ரெயில்தான். இந்த மெட்ரோ ரெயில்கள், லண்டன் ரெயில்களைப்போல் சுத்தமாக இல்லாவிட்டாலும், நியூயார்க் ரெயில்களைப்போல் அதிவேகமாக ஓடாவிட்டாலும், கூடிய வரையில் சௌகரியமாகவே அமைந்திருக்கின்றன. பூமிக்குக் கீழ் ஓடும் ரெயில்களுக்குள்ளே இங்கே தான் இரண்டு வகுப்புக்கள் இருக்கின்றன.

பாரிஸில் முதன் முதலாக வயது முதிர்ந்த ஒரு பிரெஞ்சு அம்மையாரைச் சந்தித்தேன். இவ்வம்மையாரின் விருந்தினராகத்தான் காந்திஜி பாரிஸில் தங்கியிருந்தார். இவ்வம்மையாரின் முயற்சியால் ஏற்படுத்தப்பெற்ற 'இந்திய நண்பர்கள் சங்க' விருந்துக்குச் சென்றேன். உணவுக்குப் பேர்பெற்ற பாரிஸ் நகரத்தின் ஒரு மூலையிலே, சிறிய வீட்டில், இரண்டாவது மாடியில் இச்சங்கத்தினர் கூடி மிக எளிய சைவ உணவை அருந்தினர். கூட்டத்தில் சுமார் 15 பேர்

கள் தான் இருந்தனர். அன்றைய பிரசங்கியாரான மாடம் மொரீன் அம்மையார் எனக்கு அறிமுகப் படுத்தி வைக்கப் பட்டார். அந்த அம்மையாரின் பிர சங்கம் பிரெஞ்சு பாஷையில் இருந்ததனால், எனக்கு ஒன்றுமே புரியவில்லை. பிரசங்கம் முடிந்த பிறகு, பலரும் பிரசங்கத்தில் கூறப்பட்ட விஷயங்களைப்பற்றி விவாதித்தனர். 'ஹரிஜன்' பத்திரிகையிலிருந்து சில பகுதிகள் மொழி பெயர்க்கப்பட்டு அங்கத்தினர் களுக்கு வழங்கப்பெற்றன. இந்தியாவின் உண்மை நிலையைப் பத்திரிகைகள் மூலமாகவும் புத்தகங்கள் மூலமாகவும் பரப்புவதே இவர்கள் செய்யும் முக்கிய மான தொண்டு.

பாரிஸிலுள்ள பழமையான ஸ்டுடியோக்களில் 'எக்ளேர்' ஸ்டுடியோவும் ஒன்று. இந்தியாவிலுள்ள ஒரு பிரெஞ்சு நண்பர் இந்த ஸ்டுடியோவுக்கு என் னிடம் ஒரு அறிமுகக் கடிதம் கொடுத்தார். அந்த ஸ்டுடியோவிலேயே ஆங்கிலம் பேசுவோர் இரண்டு பேர் தான். அவர்களில் ஒருவருக்கு என்னை உபசரிக் கும் பொறுப்பு அளிக்கப்பட்டது.

பாரிஸிலுள்ள சிறந்த உணவுச் சாலைகள், ஸ்டுடி யோக்கள், சினிமாக்கள் இவற்றுக்குப் போவது தான் பெரும்பாலும் எனது தினசரி வேலை. சமீபத் தில் இந்தியாவிலிருந்து திரும்பிய சில பிரெஞ்சு பாதிரி கள் இந்தியாவின் குறைகளை மட்டும் காட்டும் பல சிறிய சினிமாப் படங்களைத் தயாரித்து வந்து, அதன் மூலம் பிரான்ஸில் இந்தியாவைப்பற்றி இழிவாகப் பிரசாரம் செய்து தங்கள் வேலைகளுக்குப் பணம் சேர்க்கிறார்களென்று தெரிந்து கொண்டேன். இந்தி யாவின் கலை, நாகரிகம், இயற்கை வனப்புமுதலிய

வைகளைப் பற்றிய படங்களைத் தயார் செய்து வெளி நாடுகளுக்கு அனுப்பினால்தான், தவறான பிரசாரங் களைத் தடுக்க முடியுமென்று உணர்ந்தேன்.

பாரிஸில் சினிமாத் தியேட்டர்கள் மிகவும் நாகரிகமானவை. ஆனால் ஒரே ஒரு தொந்தரவு மட் டும் உண்டு. நாம் டிக்கட் வாங்கிக்கொண்டு உள்ளே நுழைந்ததும், அங்கே வேலை செய்யும் பெண், நம் முடைய டிக்கட்டை வாங்கிக்கொண்டு, நாம் உட்கார வேண்டிய இடத்தைக் காண்பித்துவிட்டு, நமது டிக் கட்டை நம்மிடம் திருப்பிக் கொடுப்பாள். அப்பொ ழுது நாம் அவளுக்கு ஏதாவது இனும் கொடுப்பது அந்த நாட்டு வழக்கம். நாம் கொடுக்காதிருந்தால், 'ஸெர்விஸ்' என்று கூறி இனும் கொடுக்கும்படி நம்மைக் கட்டாயப்படுத்துவாள்.

ஆபெரா ஹவுஸுக்கு அருகே 'நாயுடு ரெஸ்டா ரண்ட்' என்று ஒன்றிருக்கிறது. இதை நடத்தும் நாயுடு ஒரு தமிழர். இவர் ஒரு ஜெர்மன் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறார். இந்த 'ரெஸ் டாரண்'டில், சோறு, கறி, பருப்பு, சப்பாத்தி முதலி யவை கிடைக்கும். ஆனால் விலை மட்டும் மிக அதிகம்.

இந்த 'ரெஸ்டாரண்'டில் பல இந்தியர்களைச் சந்தித்தேன். ஒரு நாள் என் அருகில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒரு முதிய பிரெஞ்சுக்காரர் என் னுடன் அரை குறையான தமிழில் பேசினார். அவர் புதுச்சேரியில் ஒரு நியாயாதிபதியாக இருந்தவராம்.

பாரிஸ் நகரத்தில் உலகப் பிரசித்திபெற்ற பல கலாசாலைகள் இருக்கின்றன. உலகத்தின் பல பகுதி களிலிருந்தும் மாணவ மாணவிகள் இங்குப் பயில வருகிறார்கள். ஒரு நாள் 'இந்திய மாணவர் சங்க'

விருந்துக்குச் சென்றேன். அன்று லண்டனிலிருந்து ஸ்ரீ கிருஷ்ணமேனன் வந்திருந்தார். மாணவ மாணவிகளின் எண்ணில்லாத கேள்விகளுக்கு அவர் சாந்தமாகவும் ஆணித்தரமாகவும் பதிலளித்தார்.

பாரிஸ் நகரின் இரவுத் தோற்றம் மிக அழகாயிருக்கும். நீண்ட புல்வார்டு வீதிகள், வீதிகளின் இருமருங்கிலுமுள்ள (cafe) காபிக் கிளப்புகள், விளக்குகளால் அலங்கரிக்கப் பெற்ற வியாபார ஸ்தலங்கள் முதலியன பார்க்க ரமணீயமா யிருக்கும்.

பாரிஸ் நகரத்து இரவு வாழ்க்கை பேர் போனது. பாரிஸ் நகரத்தின் சிறந்த இரவுக் கிளப்புகளில் ஆயிரக் கணக்கான அந்நியர்கள், சாராயம் குடித்து விட்டு, நிர்வாண நாட்டியங்களைப் பார்த்துக் கூத்தாடுவர். இதைக் கொண்டு பிரெஞ்சுக்காரர்களை நாம் மதிப்பிடலாகாது. இது பாரிஸ் நகர வாழ்க்கையின் ஒரு புறம் தான்.

சங்கீதத்துக்கும், சித்திரத்துக்கும், நாட்டியத்துக்கும், இன்னும் பிற பல கலைகளுக்கும் சிறந்த இருப்பிடம் பாரிஸ். சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகிய உன்னதமான கொள்கைகளுக்காக உலகப் பிரசித்திபெற்ற 'பிரெஞ்சுப் புரட்சி'யைத் தோற்றி, அதில் வெற்றி பெற்ற சுதந்திர வீரர்களான பிரெஞ்சுக்காரர்களின் தலை நகரம் பாரிஸ். உலகத்திலுள்ள பெரிய வியாபார ஸ்தலங்களில் ஒன்று பாரிஸ். இவைகளினுலே தான் பாரிஸ் நகரம் சிறப்புற்று விளங்குகிறது.

பிரெஞ்சுக்காரர்கள் மிக நல்லவர்கள்— அவர்களிடம் நிறத் துவேஷமே கிடையாது. பிறரை எப்பொழுதும் சமத்துவமாகவும் அன்பாகவும் நடத்து

வார்கள். நான் சொல்வதெல்லாம் பிரான்ஸிலுள்ள பிரெஞ்சுக்காரர்களைப் பற்றித்தான்; பிரெஞ்சு சாம்ராஜ்யத்திலுள்ள பிரெஞ்சுக்காரர்களைப் பற்றியல்ல. ஒரு தேசத்தார் எவ்வளவு நல்லவர்களா யிருந்தாலும், எவ்வளவு உயர்ந்தவர்களா யிருந்தாலும், அவர்கள் தங்கள் பலத்தால் மற்ற தேசத்தினரை அடக்கியாள்வார்களானல், அவர்கள் கேவலமானவர்களே. பிரான்ஸின் இன்றைய நிலை பரிதாபமாய் இருக்கிறது. பிரெஞ்சுக்காரரின் சுதந்திரத்துக்கே ஆபத்து நேர்ந்திருக்கிறது. பிரான்ஸின் ஒரு பகுதி ஜெர்மானியர்களின் ஆதிக்கத்திலிருக்கிறது. ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் பல தேசங்களை அடக்கி யாளும் பிரெஞ்சுக்காரர்களில் பெரும்பாலோர் இன்று ஜெர்மானியர்களால் அடக்கியாளப்படுகின்றனர். நாஜிகளின் கொடுமை ஒழிந்து பிரான்ஸ் தேசம் விடுதலையடைய வேண்டுமென்பதே நமது விருப்பம். ஆனல் இந்த விடுதலை பிரான்ஸ் தேசத்துக்கு மட்டுமல்ல; பிரெஞ்சு சாம்ராஜ்யத்திலுள்ள அத்தனை நாடுகளுக்கும் கிடைக்க வேண்டும். அப்பொழுது தான் பிரான்ஸுக்குப் பிரகாசமான எதிர்காலம் ஏற்படும்.

# 4. பெர்லின் நகரில்

ஜெர்மனியின் தலைநகரான பெர்லின் நகரத்து ரெயில்வே ஸ்டேஷன்களுள் ஒன்றில், ஒருநாள் காலை ஆறு மணிக்கு இறங்கினேன். சாமான்களை ரெயில்வே ஸ்டேஷனிலேயே வைத்துவிட்டு, காபி சாப்பிடுவதற்காக ஸ்டேஷன் உணவுச் சாலைக்குச் சென்றேன். காலையுணவு இரண்டு மார்க். (ஒரு மார்க் சுமார் ரூ. 1-2-0 ஆகிறது.)

பெர்லின் நகரில் சில மாதங்கள் தங்க எண்ணிய தால், ஹோட்டலில் தங்கி பணத்தை வீணுக்காமல், ஏதாவது குடும்பங்களில் தங்க எண்ணினேன். கையில் பெர்லின் நகரத்துப் படமொன்றை வைத்துக்கொண்டு யூனிவர்ஸிட்டிக்கு அருகிலுள்ள பல இடங்களில் சென்று விசாரித்தேன். சுமார் மூன்று மணி நேரம் அலைந்தேன்.

எங்கெங்கு "அறை காலி" என்று காணப்பட்டதோ, அங்கெல்லாம் சென்று கதவைத் தட்டினேன். எனக்கோ ஜெர்மன் பாஷை தெரியாது; அவர்களுக்கோ ஆங்கிலம் தெரியாது. என்ன செய்வதென்று யோசித்துக்கொண் டிருக்கையில், ஒரு ஜப்பானிய உணவுச் சாலை தென்பட்டது. கதவைத் திறந்துகொண்டு, உணவுச் சாலைக்குள் சென்றேன். ஒரு ஜெர்மானிய இளம் பெண்—அவள் வேலைக்காரியாக இருக்கவேண்டும்—என்னைக் கண்டதும் ஆச்சரியத்தோடு உற்றுப் பார்த்தாள். அவள்

தனது யஜமானனை ஜப்பான் பாஷையில் கூப்பிட்டாள். எனக்கு உடனே சிறிது தைரியம் வந்தது.

எனது அரை குறையான ஜப்பான் பாஷையில் அவளுடன் பேச ஆரம்பித்தேன். ஏறக்குறைய நாங்கள் இருவரும் ஒரேமாதிரியான ஜப்பான் பாஷை பேசியதால், ஒருவரை யொருவர் புரிந்துகொள்வது சுலபமாயிருந்தது. பாவம், அந்தப் பெண் அரை மணி நேரம் வரை சிரமப்பட்டு, பல இடங்களுக்கு டெலிபோன் செய்தாள். ஆங்கிலம் தெரிந்தவர்களின் குடும்பம் ஒன்றுமே கிடைக்கவில்லை. கடைசியாக ஒரு ஹோட்டலில் தங்குவதென்று முடிவுசெய்தேன்.

ஹோட்டல் மிகவும் சாதாரணமானது. கட்டிடமோ மிகப் பழையது. நடு ஹாலில் சிலர் சுற்றி உட்கார்ந்து குளிர்காய்ந்துகொண்டிருந்தார்கள். அவர்களில் பலர் நாட்டுப்புறத்து மனிதர்கள்.

ஒருவர் என்னைப் பார்த்து, வலியப் புன்முறுவல் செய்து ஏதோ கேள்வி கேட்டார். நான் ஒன்றும் புரியாமல் அசட்டுச் சிரிப்புச் சிரித்தேன். அருகிலிருந்த மற்ரொருவர் அரை குறையான ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூறினார். கேள்வி என்ன தெரியுமா? நான் ஒரு சீனாக்காரனா? என்பதுதான்.

மறு நாள் மாலை ஹோட்டல் பில் கிடைத்தது. அதைப் பார்த்ததும் திடுக்கிட்டேன்.

நான் வெளியிலுள்ள உணவுச் சாலையில் காலையுணவு உட்கொண்டேன். ஆனால் எனது ஹோட்டல் பில்லில் காலையுணவுக்காக 55 காசு போட்டிருந்தது. நான் திடுக்கிட்டதற்குக் காரணம் இதுதான்.

ஹோட்டல் மானேஜரிடம் சென்று, நான் காலையுணவு வேறொரு இடத்தில் சாப்பிட்டதாகவும், ஹோட்டல் பில்லில் இது தவருகச் சேர்க்கப்பட்டிருக்கிறதென்றும் கூறினேன். அதற்கவன், "இந்த ஹோட்டலில் தங்கும் ஒவ்வொருவரும் இங்கேயே காலையுணவு உட்கொள்ளவேண்டும். அப்படியில்லாவிட்டால், நீங்கள் காலையுணவு உட்கொள்ளாததால் எங்களுக் குண்டாகும் நஷ்டத்திற்காக 50 காசு கொடுக்கவேண்டும்" என்ருன்.

"அப்படியாளுல் 5 காசு ஏன் அதிகமாகச் சேர்த்திருக்கிறீர்கள் ?" என்றேன்.

"ஐம்பது காசுக்கு ஸெர்விஸ் சார்ஜ் 5 காசு" என்ருன்.

ஐரோப்பாவில் பொதுவாக நாம் சாப்பிட்டால், எவ்வளவு தொகைக்குச் சாப்பிடுகிருேமோ, அத்தொகைக்கு 10 அல்லது 15 பர்செண்டு வீதம் அந்த வேலைக்காரர்களுக்கோ, அல்லது ஹோட்டலுக்கோ கட்டாயமாக இனும் கொடுக்கவேண்டும். இதற்கு "ஸெர்விஸ்" என்று பெயர்.

"காலை ஆகாரம் சாப்பிடாததற்காக 50 காசு. சாப்பிடாத காலை ஆகாரத்திற்கு ஸெர்விஸ் ஐந்து காசு. இதென்ன கொள்ளையாக விருக்கிறது" என்று கோபத்தோடு உரக்கப் பேசினேன். ஹோட்டல் மானேஜர் அசையாது மரம்போல நின்ருன். பிறகு அவன் சாந்தமாக "இந்த நாட்டில் நீங்கள் சண்டை போடுவதில் பயனில்லை. பேசாமல் பணத்தைக் கொடுத்துவிட்டு சாமான்களை எடுத்துச் செல்லுங்கள்" என்ருன். "கடவுளே" என்று பணத்தைக் கொடுத்தேன்.

புது ஹோட்டலிலும் ஒன்றும் சௌகரியமில்லை. குளிப்பதற்கு ஒவ்வொரு தடவையும் சுமார் ஒன்றரை ரூபாய் கொடுக்கவேண்டும். எனவே தினந்தோறும் குளிப்பதென்பது கையிலுள்ள பண நிலையைப் பொறுத்ததாகிவிட்டது.

இந்திய மாணவர்கள் சங்கத்துக்குச் சென்றேன். இந்த மாணவர் சங்கத்தில் அடிக்கடி பல அறிஞர்கள் பிரசங்கம் செய்தனர். ஜெர்மன் ராணுவத்தைச் சேர்ந்தவர்களும், ராணுவ உடையுடன் இக் கூட்டங்களுக்கு அடிக்கடி வருவதுண்டு. ஒரு கூட்டத்தில் ஜெர்மன் சர்வ கலாசாலை சம்ஸ்கிருத பண்டிதர் டாக்டர் லுட்விக் அல்ஸ்டோர்ட், தமிழ்ப் பண்டிதர் டாக்டர் பெய்தான் சாஸ்திரி முதலியவர்களைச் சந்தித்தேன்.

மிகவும் சுத்தமான நகரங்களில் பெர்லினும் ஒன்று. இந்நகரத்தின் அமைப்பு மிகவும் நேர்த்தியானது. சில இடங்களில் பெரிய வீடு, வீதியின் ஒரு 'பிளாக்' நீளமிருக்கும். இம்மாதிரி நான்கு புறத்திலும் நான்கு வீடுகள் கட்டப்பெற்றிருக்கும் இந்த நான்கு வீடுகளுக்கும் நடுவே ஒரு அழகான தோட்டமும், அதன் நடுவே ஒரு தடாகமும் இருக்கும். இந்த நான்கு வீட்டுக் குழந்தைகளும் இந்தத் தோட்டத்தில் விளையாடுவார்கள். வீதிகளில் விளையாடும் குழந்தைகள் மிகச் சொற்பம்.

பெர்லின் நகரத்தில் முக்கியமான வீதி "உண்டெர் டென் லிண்டன்" என்பது. இவ் வீதியின் ஒரு கோடியில் கெய்ஸரின் அரண்மனை இருக்கிறது. இந்த அரண்மனையை ஒரு பொருட்காட்சி சாலையாக வைத்திருக்கிருர்கள். இந்த அரண்மனையை நமக்குச்

சுற்றிக் காண்பிக்கும் வேலைக்காரன் எல்லாவற்றை யும் காண்பித்த பின்னர் கடைசியாக, "இந்த மாடி யிலிருந்துதான் கெய்ஸர் யுத்தம் தொடங்குவதாக பிரகடனம் செய்தார்" என்று கூறுவான்.

இதே வீதியின் மற்ருெரு கோடியில் ஜெர்மன் பார்லிமெண்டுக் கட்டிடம் இருக்கிறது. ஹிட்லர் ஆட்சிக்கு வருமுன் 17 கட்சிகள் பார்லிமெண்டில் இருந்தனவாம். ஆனல் அதில் இப்பொழுது நாஜி கட்சி ஒன்றுதான் இருக்கிறது. இந்தப் பார்லி மெண்டுக் கட்டிடம் சில வருஷங்களுக்கு முன் தீப்பிடித்து எரிந்தது. இது சம்பந்தமாக வேடிக்கை யான கதையொன்றை பெர்லினில் கூறுவார்கள். பார்லிமெண்டுக் கட்டிடம் தீப்பிடித்து எரிகிற தென்று ஹிட்லரிடம் சென்று கூறினர்களாம். அப் பொழுது ஹிட்லர் தன்னுடைய கடிகாரத்தைப் பார்த்துவிட்டு "இவ்வளவு சீக்கிரமா?" என்ருராம். கடைசியில், பாவம், ஹாலந்து தேசத்துப் பைத்தியக் காரன் ஒருவனைப் பிடித்து, ஜெர்மன் பார்லி மெண்டுக் கட்டிடத்துக்குத் தீயிட்ட குற்றத்துக்காக தூக்கிலிட்டார்களாம்.

இந்தப் பார்லிமெண்டுக் கட்டிடத்துக்குப் பக் கத்தில்தான் ஹிட்லரின் காரியாலயம் இருக்கிறது. இக் காரியாலயத்தின் முகப்பில் இருக்கும் மாடியி லிருந்து ஹிட்லர் "காட்சியளிப்பது" வழக்கம். ஹிட்லர், ஆட்சிக்கு வருமுன், இக் காரியா லயத்தின் எதிரேயுள்ள ஹோட்டலில் தங்கி யிருந்தானும்.

பெர்லின் நகரில் ஏராளமான சைவ உணவுச் சாலைகள் இருக்கின்றன. சில சைவ உணவுச்சாலை

களில் முட்டையும் மீனும் சைவ உணவுகளாகவே கருதப்படுகின்றன. ஐரோப்பாவிலுள்ள சைவ உணவுச்சாலைகளிலே, பெர்லின் உணவுச் சாலைகள் தான் சிறந்தவை என்று கூறலாம். இந்த உணவுச் சாலையில் தயாரிக்கும் எல்லாவித உணவுகளையும் விதத்திற்கு ஒன்ருக, கண்ணுடி அலமாரிகளில் காட்சியாக வைக்கிருர்கள். ஒவ்வொரு பிளேட்டுக்கருகிலும், அந்தப் பிளேட்டிலுள்ள உணவின் பெயரும், அதன் விலையும் குறிக்கப்பெற்ற சீட்டுகள் தொங்கவிடப் பெற்றிருக்கும். உணவுச்சாலைக்குச் செல்பவர்கள், முகப்பிலுள்ள இந்தப் "பொருட்காட்சி" அலமாரியைப் பார்த்துவிட்டு, தங்களுக்கு வேண்டிய உணவுகளுக்கு ஆர்டர் கொடுக்கலாம்.

பெர்லின் நகரத்து மிருகக் காட்சிசாலை மிகவும் பெரிது. இம் மிருகக் காட்சிசாலையில் 10 அல்லது 15 வருஷங்களுக்கு முன், சில சீனர்களையும் சுமார் 25 இந்திய ஆண், பெண்களையும் வைத்திருந்தார்களாம். ஜெர்மானியர்கள் பணத்தைக் கொடுத்து மிருகக் காட்சிசாலைக்குள் சென்று, சிங்கம், புலி, கரடி முதலிய மிருகங்களையும், அந்த மிருகங்களைப் போல அடைக்கப்பட்டுக் காட்சியாக வைக்கப்பட்டிருந்த இந்தியர்களையும் பார்த்து மகிழ்ந்தார்கள். அப்பொழுது ஜெர்மனிக்குச் சென்ற சில இந்தியத் தேசீயத் தலைவர்களின் முயற்சியால் இந்த அவமானக் காட்சி ஒழிந்தது.

வயது முதிர்ந்த ஜெர்மன்காரர்கள் இந்தியர்களைக் கண்யமாக நடத்துகிருர்கள். ஆனால் புதிய ஹிட்லர் இளைஞர்களுக்கு, அந்நியர்களை—அதிலும் கருப்பு நிறத்தவர்களைக் கண்டாலே பிடிக்காது.

வெள்ளை நிறத்தவர்கள், மற்றவர்களை ஆளப்பிறந்திருக்கிறார்கள் என்பது இவர்கள் கொள்கை.

மற்ற நகரங்களுக்கில்லாத ஒரு சிறந்த வசதி பெர்லின் நகரத்தில் உண்டு. அதாவது நகரின் மத்தியிலேயே மிகப் பெரிய ஆகாயவிமான நிலையம் இருக்கிறது. நமது செண்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து ரயில் வண்டிகள் புறப்படுவதுபோல, இந்த ஆகாய விமான நிலையத்திலிருந்து நூற்றுக் கணக்கான ஆகாயவிமானங்கள் ஐரோப்பாவின் பல பாகங்களுக்கும் செல்கின்றன.

ஹிட்லரின் கொடுமையைப் பற்றி நான் ஒன்றும் கூறவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் இதற்காகவே பிரிட்டிஷ் மந்திரிசபை, விளம்பர இலாகா ஒன்றை வைத்திருக்கிறதல்லவா ?

## 5. ரங்கூன் பிரயாணம்

திடீரென்று ஒரு நாள், ரங்கூனுக்குப் போவதென்று முடிவு செய்தேன். ஆனால் எந்த வழியாகச் செல்வது என்பதுதான் யோசனை. இந்தியாவிலிருந்து ரங்கூனுக்குக் கப்பல் வழியாக மூன்று நகரங்களிலிருந்து செல்லலாம். கல்கத்தா, சென்னை, விசாகபட்டணம்.

யுத்தம் ஆரம்பமான பிறகு கப்பல் போக்குவரத்து முன்னிருந்தது போல ஒழுங்காக இல்லை. முன்னர், 5000, 7000 டன் நிறையுள்ள கப்பல்கள், மூன்று அல்லது நான்கு தினங்களில் ரங்கூனை அடைந்துவிடும். இப்பொழுது, கல்கத்தா, சென்னை முதலிய நகரங்களிலிருந்து 2000 அல்லது 3000 டன் நிறையுள்ள சிறிய சீனக் கப்பல்களும், நார்வீஜியக் கப்பல்களும், நினைத்தபொழுது செல்கின்றன. இவைகள் எல்லாம் முன்னர் சாமான் கப்பல்கள். இப்பொழுதும் பிரயாணிகளை, சாமான்களைப் போலத்தான் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன. சில சமயங்களில் இக் கப்பல்கள் ரங்கூனை யடைவதற்கு எட்டு நாட்கள் கூட ஆகி விடுகின்றன.

தற்போது ரங்கூனுக்குச் செல்கின்ற கப்பல்களில் விசாகபட்டணத்திலிருந்து செல்கின்ற கப்பல்கள்தான் சிறிது வசதியுள்ளவை. விசாகபட்டணத்திற்கு இப்பொழுது சுக்கிர தசை அடிக்க ஆரம்பித்திருக்கிறது. ஆந்திர சர்வகலாசாலை, சினிமா

ஸ்டுடியோ, நாற்புறமும் மலைகளாலும் நிலப்பரப்பாலும் சூழப் பெற்ற இயற்கையான துறைமுகம், சிந்தியா கம்பெனியாரின் கப்பல் கட்டும் புதுமுயற்சி, உடுப்பி பிராமணாள் காபி கிளப்புகள் இவ்வளவும் இருக்கும்பொழுது விசாகபட்டணத்திற்கு அதிர்ஷ்டம் அடிப்பதற்குக் கேட்பானேன்? இந்த அழகான ஊரைப் பாதுகாக்க ஆயிரக்கணக்கான வெள்ளை சோல்ஜர்கள் இங்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள். விசாகபட்டணத்திலிருந்து 'சில்கா' என்ற கப்பலில் பிரயாணமானேன். மற்றக் கப்பல்களைவிட 'சில்கா'வுக்கு ஒரு தனிப் பெருமை உண்டு. சாதாரணமாக, கப்பல்களில் பிரயாணிகள் உலாவுவதற்கு 'டெக்' வசதி யிருக்குமல்லவா? ஆனால் 'சில்கா'வில் டெக் என்பதே கிடையாது. டெக்கே இல்லாமலிருக்கும் பொழுது டெக் விளையாட்டுக்கள் எப்படி யிருக்க முடியும்?

முதலிரண்டு நாட்கள் கப்பல் கரையோரமாகவே சென்றது. இந்த இரண்டு நாட்களில் மூன்று ஊர்களில் கப்பல் நின்றது.

முதலாவது கலிங்கப் பட்டினம், இரண்டாவது பாரூவா, மூன்றாவது கோபால்பூர். இந்த மூன்று ஊர்களிலும் துறை முகங்கள் இல்லை. கப்பல் சுமார் இரண்டு மைல் தூரத்தில் நங்கூரம் போட்டிருக்கும்; பிரயாணிகள் படகுகளில் வந்து கப்பலில் ஏறிக் கொள்வார்கள்.

கோபால்பூர், ஏழ்மைக்குப் பேர்பெற்ற ஒரிஸா மாகாணத்தைச் சேர்ந்தது. கப்பல் நங்கூரம் போட்டிருக்கும் பொழுது, ஏராளமான செம்படவர்கள் படகுகளில் வந்து, மீன், இளநீர் முதலியவை

களை விற்பார்கள். இச் செம்படவர்கள் அணிந் திருக்கும் குல்லாய் மிக விநோதமாயிருக்கும். இவர் களின் படகுகள் மிக நீளமாயிருக்கும்; அகலம் மட்டும் ஒருவர் உட்காருவதற்குப் போதுமானதா யிருக்கும். இச் செம்படவர்கள் கால்களைப் பின்புற மாக மடக்கிக்கொண்டு உட்கார்ந்திருப்பார்கள். சில சமயங்களில் இவர்கள் படகோட்டுகிறார்களா, அல்லது தண்ணீரில் மிதக்கிறார்களா என்று சந்தேக முண்டாகும்.

* * *

கோபால்பூரிலிருந்து நான்காவது நாள் கப்பல் ரங்கூனை யடைந்தது. கப்பல் காப்டன், விசாகபட்ட ணத்திலேயே என்னுடைய காமிராவை வாங்கி வைத் துக்கொண்டார். இரங்கூன் துறைமுகத்தில் இறங் கும் பொழுதுதான் காமிராவை என்னிடம் திருப்பிக் கொடுத்தார்.

கஸ்டம்ஸ் அதிகாரிகள் காமிராவை என்னிடம் கொடுத்துவிட்டு, காமிராவுக்குள் இருந்த பிலிம் சுருளை மட்டும் எடுத்துக்கொண்டு விட்டார்கள்.

ரங்கூன் மிகவும் அழகான நகரம். ரங்கூனில், எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் கண்ணைமூடிக் கொண்டு போகலாம் என்று கூறுவார்கள். ஆனால் அப்படிச் சென்றால் நிச்சயமாய் ஆபத்துண்டாகும். என்றாலும் ரங்கூன் நகரின் சிறந்த அமைப்பைக் குறிப்பிடுவதற்கு இவ்வாறு கூறுவது வழக்கம்.

ரங்கூன் நகர அமைப்புப் படத்தைப் பார்த்தால், செங்கல் கற்களை அளவுடன் பரப்பி வைத்ததைப் போலிருக்கும். 900 மைல் தூரம் வரை கப்பல் செல்லும் வசதியுள்ள அழகான ஐராவதி நதியின்

கரை ஒருபுறம், பர்மா ரயில்வே லைன் ஒரு புறம், இதன் மத்தியில் ஐந்து நீளமான வீதிகள், இந்த ஐந்து வீதிகளுக்குக் குறுக்கே சுமார் நூறு வீதிகள், நகரின் மத்தியிலே அழகே உருவான சூலே பயா என்னும் புத்தர் திருக்கோயில்,—இதுதான் ரங்கூன் நகரம். நாகரிக நகரத்தின் முக்கியமான அம்சங் களில் ஒன்று டிராம் வண்டி யல்லவா? ஆனால் ரங்கூனில் டிராம் வண்டிகளைப் பெரும்பாலும் எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக மின்சாரத்தில் ஓடும் மோட்டார்களை (Trolly Buses) அமைத்திருக் கிறார்கள். சில வருஷங்களில் ரங்கூனில் டிராம் வண்டிகளே இல்லாமல் போய்விடலாம். 'ஏர் கண்டிஷனிங்' வந்த பிறகு மின்சார விசிறி கர்நாட கம் போல ஆகிவிட்டதல்லவா? அதைப்போல டிராலி பஸ்கள் வந்த பிறகு டிராம் வண்டிகளும் கர்நாடக மாகி விட்டன.

வசதியான டிராலி பஸ்கள் ஓடும் ரங்கூன் நகரில் பல்லாயிரக் கணக்கான ரிக்ஷாக்கள் இருக்கின்றன. இந்த ரிக்ஷாக்களை இழுக்கும் தொழில், ஆந்திர சகோதரர்களின் ஏகபோக உரிமை. ஆனால் அதற்கும் இப்பொழுது ஆபத்து வந்துவிட்டது. 1943 ஜனவரி முதல் தேதியிலிருந்து பர்மாவில் மனிதனை மனிதன் இழுக்கும் வழக்கம் நின்றுவிடும். ஆனால் மனிதனை மனிதன் ஆளும் வழக்கம் என்று நிற்குமோ?

* * *

ரங்கூன் நகரத்தில், உலகத்திலுள்ள பல்வேறு நாட்டினரைப் பார்க்கலாம். பர்மா ரோடு திறந்தது முதல் ஏராளமான சீனர்கள் வந்து குடியேறி யிருக் கின்றனர். ரங்கூனுக்கும் சுங்கிங்குக்கும் 4000

மைலுக்கு மேலிருக்கும். பர்மா ரோடு மூலமாக, சுமார் பத்தாயிரம் லாரிகள் வியாபாரப் பொருள்களை ஏற்றிச் செல்கின்றன.

தற்பொழுது ரங்கூனைப் பார்த்தால் சீனாக்காரன் பட்டணம் போலத் தோன்றுகிறது. எங்கே பார்த்தாலும் சீன ஹோட்டல்கள், சீனர்களின் சினிமாத் தியேட்டர்கள்; தவறி விழுந்தால் சீனன் மீதுதான் விழவேண்டும்.

பர்மியர்கள் நல்ல ஜனங்கள். பட்டாடை யுடுத்திப் பகட்டாக வாழ்வதில் அவர்களுக்குப் பிரியமதிகம். பர்மியர்களுக்கு இந்தியாவிடம் பெருமதிப்பு உண்டு. காந்திஜியும் நேருவும் அங்கு சென்றபொழுது, பர்மியர்கள் ராஜ உபசாரத்துடன் வரவேற்றனர். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக பர்மியர்களுக்கும் இந்தியர்களுக்கும் வெகு நாட்களாக நல்லுறவே இல்லை. இதற்கு முக்கிய காரணம் இந்தியர்கள் பர்மாவை வியாபாரக் கண் மட்டும் கொண்டு நோக்குவதேயாகும். பொதுவாக இந்தியர்களும் பர்மியர்களும் சமூக வாழ்வில் நெருங்கிப் பழகுவதில்லை. இந்தியர்களைப் போலவேதான் ஆங்கிலேயர்களும் ஒதுங்கி வாழ்கின்றனர். ஆனால் அவர்கள் ஆளும் ஜாதியினர்.

பர்மியர்கள் பல துறைகளிலும் படிப்படியாக முன்னுக்கு வருகிறார்கள்; ஆனால் ஒவ்வொரு படியிலும் தடைகள் உண்டாகின்றன. இதற்குக் காரணம் அந்நியர்கள். பொதுவாக பர்மியர்களை விட, பர்மாவிலுள்ள அந்நியர்கள் மிகவும் திறமையானவர்கள். இதைப் பர்மியர்களும் உணர்கின்றனர். "ஆயிரமுண்டிங்கு ஜாதி, எனில் அந்நியர்

வந்து புகலென்ன நீதி" என்ருர் பாரதியார். இதே மாதிரியான ஒரு கேள்வியைத்தான் பர்மியர்களும் கேட்கின்றனர்.

பர்மாவின் முக்கியமான வியாபாரப் பொருள்கள் மூன்று. அரிசி, மரம், பெட்ரோல் இம்மூன்று வியாபாரங்களும் தற்சமயம் அந்நியர்கள் கையிலிருக்கின்றன.

பர்மியர்கள் உணர்ச்சியின் வசப்பட்டவர்கள். ரொம்பவும் தேசீயவெறி கொண்டவர்கள். தேசீயக் கொடியான மயில் கொடியை வணங்குவார்கள். உடை விஷயத்தில் பர்மியர்கள் முற்றிலும் தேசீய வாதிகள். டவாலி முதல் பிரதம மந்திரி வரையில், தேசீய முறையிலேதான் உடை அணிவார்கள். ஆங்கில முறையில் உடையணியும் பர்மியர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

பர்மியர்களுக்கு நாடகம், கூத்து, சினிமா முதலியவைகளிலே அதிகமான பிரியம். பர்மியர்கள் இப்பொழுது இந்தியப் படங்களையும் பார்த்து ரசிக்கின்றனர்.

பர்மாவைப்பற்றி நினைக்கும்பொழுது, கம்பீரமாகத் தோற்றமளிக்கும் தங்க மயமான ஸ்வேதகான் கோவிலும் பர்மாவிலுள்ள எண்ணற்ற நண்பர்களின் மாருத அன்புந்தான் ஞாபகத்திற்கு வருகின்றன. இந்தச் சந்தோஷ நினைவுகளுக்கு மத்தியிலே, பர்மாவில் இந்தியர்களின் எதிர்காலத்தைப்பற்றிய கவலையும் உண்டாகிறது.

* * *

பர்மா ஒரு காலத்தில் இந்தியாவின் மாகாணங்களில் ஒன்ருய் இருந்தது. பிரித்தாளும் சூழ்ச்சிக்குப்

பேர்போன பிரிட்டிஷார், பர்மாவையும் இந்தியாவி லிருந்து பிரித்து விட்டார்கள். பர்மாவை இந்தியாவி லிருந்து பிரிக்கக் கூடாதென்று பர்மியர்களில் பெரும் பான்மையோர் விரும்பினார்கள். பிரிவினை வேண்டாத கட்சிதான் சட்டசபையில் மெஜாரிட்டியாக வந்தது. கீழ் நாடுகளைப் பொறுத்தவரை பெரும்பான்மை யோர் விருப்பத்துக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் என்று தான் மதிப்புக் கொடுத்தது?

சில பர்மிய அரசியல் கட்சிகளுக்கு, இந்தியர்கள் மீது துவேஷம் உண்டாக்குவதே முக்கிய நோக்கம். இன்று பர்மாவின் பிரதம மந்திரியாக விருக்கும் ஊஸோ இந்தியர்களின் பரம விரோதி. இந்த ஊஸோவை பரம விரோதியாக்கியதும் இந்தியரே.

தற்பொழுது வெளியாகி யிருக்கும் இந்திய—பர்மா குடியேற்ற ஒப்பந்தம் இந்தியர்களுக்கு ஒரு அவமானம். இந்த முறையற்ற ஒப்பந்தத்தை மறை முகமான முறையில் நிறைவேற்றுவதற்கு உடந் தையா யிருந்தவர் ஒரு இந்தியர் என்பதை நினைக்கும் பொழுது "கடவுளே! எங்கள் நாட்டை அந்நியர் களிடமிருந்து காப்பாற்ற விட்டாலும் பாதகமில்லை. எங்கள் சொந்த நாட்டாரிடமிருந்தாவது காப்பாற்ற மாட்டாயா?" என்றுதான் பிரார்த்திக்க வேண்டி யிருக்கிறது.

பர்மா பர்மியர்களின் நாடு. அது அவர்களுக்கே சொந்தம். பர்மாவின் முன்னேற்றத்தை உத்தே சித்து, குடியேற்றத்தைக் கட்டுப்படுத்த அவர்களுக் குப் பூரண உரிமையுண்டு. நமக்கு இதில் ஒன்றும் ஆட்சேபமில்லை. ஆனால் இந்தக் குடியேற்ற ஒப்பந் தம் அந்நியர்கள் எல்லோரையும் கட்டுப்படுத்து

மானால் நியாயமென்று கூறலாம். பர்மா, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்தது. பிரித்தானியர்களும் இந்தியர்களும் பிரிட்டிஷ் பிரஜைகளே. பர்மாவில் இவ்விருவரும் அன்னியர்களே. அப்படி யிருக்கும் பொழுது, 6000 மைல்களுக் கப்பாலிருந்து வந்திருக்கும் பிரித்தானியர்களுக்குச் சலுகை கொடுத்து விட்டு, பல நூற்றாண்டுகளாகத் தொடர்புள்ள இந்தியர்களை, பர்மாவின் இன்றைய நன்னிலைக்கு முக்கிய காரணமா யுள்ளவர்களான இந்தியர்களை, அடித்து விரட்டுவதைப் போல ஒப்பந்தம் செய்வது மிகவும் அநீதியாகும். இந்தியா சுதந்திர நாடாக இருந்தால், அல்லது காங்கிரஸ் மந்திரி சபையாவது பதவியிலிருந்தால், இப்பொழுது இந்தக் குடியேற்ற ஒப்பந்தம் நடைபெற்றிருக்காது என நிச்சயமாய் கூறலாம்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தியர்கள் கேவலமாக நடத்தப்படுவதைப்போல, உலகத்தில் வேறெந்த நாட்டிலும் இந்தியர்கள் நடத்தப்படுவதில்லை.

(இக்கட்டுரை பர்மா யுத்தத்திற்கு முன் எழுதப்பட்டது.)

## 6. பம்பாயில் கண்டவை

"அடிக்கடி பம்பாய்க்குப் போகிறீர்களே, அங்கென்ன அதிசயத்தைக் கண்டீர்கள்?" என்று கேட்டார் ஒரு நண்பர்.

"நமது சென்னையி லில்லாத அதிசயமா பம்பாயிலிருக்கிறது?" என்றேன்.

"அப்படியா?" என்றார் நண்பர்.

"ஆம், நீங்கள் சாதாரணமாகத் தினந்தோறும் சென்னையில் காணும் ஒன்றை, பம்பாயில் மருந்துக்குக் கூடப் பார்க்க முடியாது" என்றேன்.

நண்பர் ஆச்சரியத்தோடு என்னை நோக்கினார்.

"ரிக்‌ஷாவைத்தான் சொல்லுகிறேன். பம்பாயில் மனிதனை மனிதன் இழுக்கும் நாகரிகம் இன்னும் பரவவில்லை" என்றேன்.

ஒரு நகரத்தின் பெருமையை, அந்நகர அமைப்பிலிருந்தும், கட்டிடங்களி லிருந்தும், போக்குவரத்துச் சாதனங்களி லிருந்தும் ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.

பம்பாய் நகரில் போக்குவரத்துச் சாதனங்கள் சிறந்த முறையில் அமைக்கப் பெற்றிருக்கின்றன. 'விக்டோரியா' என்றழைக்கப்படும் குதிரை வண்டிகள், மாடியுடன் கூடிய டிராம் வண்டிகள், லண்டன் பஸ்களுக்குச் சமமாகச் சொல்லக்கூடிய மோட்டார் பஸ்கள், டாக்ஸிகள், வேகமாகச் செல்லும்

எலெக்ட்ரிக் ரயில் ஆகியவைதான் பம்பாயின் போக்குவரத்துச் சாதனங்கள். யுத்தம் ஆரம்பிப்ப தற்கு முன் வரை, பம்பாயில் பெரும்பாலான டாக்ஸி களுக்கு மைல் ஒன்றுக்கு நாலணுதான் கட்டணம்.

பத்து லட்சம் ஜனங்களுக்கு மேல் வசிக்குமிடம் பம்பாய். பழமையும் புதுமையும் கலந்தது பம்பாய். இந்தியாவின் வாசற்படி (அன்னியர்களுக்கு) பம் பாய்.

பம்பாயிலிருந்த ஒரு புத்திசாலியான ஆங்கிலேய கவர்னர், கடலைத் தூர்க்க, பணத்தைக் கொட்டினர். அதாவது கோடிக் கணக்கான பணத்தைச் செலவு செய்து, கடலைத் தூர்த்தார். அந்தக் கடற் கரையில் இப்பொழுது நாகரிகமுள்ள நூற்றுக் கணக்கான அழகிய கட்டிடங்கள் கட்டப் பெற்றிருக்கின்றன.

பம்பாய் நகருக்குள் இருக்கும் பொதுக் கட்டி டங்கள், இந்தியச் சிற்பத்தின் அறிகுறிகளாக விளங்குகின்றன. ஐந்தாறு மாடியுள்ள கட்டிடங் கள் சர்வ சாதாரணம். பெரும்பாலான பெரிய வீதி களில் ஜனங்கள் நடப்பதற்கு ஐந்தடிகள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. இவைகளிலே நடந்து செல்லும் பொழுது ஜாக்கிரதையாக நடந்து செல்ல வேண்டும். கீழே வாழைப் பழத்தோல் வழுக்கி விட்டாலும் ஆபத்து; அல்லது ஐந்தாவது மாடியிலிருந்து அழுகிய வெங்காயம் முதலிய பல பொருள்கள் தலைமேல் விழுந்தாலும் ஆபத்து. இதை உத்தேசித்துத்தான் பம்பாயில் எல்லோரும் தலைக்கு ஏதாவது அணிந்து கொள்கிறுர்கள் போலும். பம்பாயில் பலவிதமான மனிதர்களைப் பார்க்கலாம். பலநாட்டு மனிதர்கள் - பல மாகாணத்து மனிதர்கள் - பல நாட்டு உணவுகள்.

உங்களுக்கு என்ன சாப்பாடு வேண்டும்? இட்லி சாம்பார் வேண்டுமா? வங்காளத்து ரசகுல்லா வேண்டுமா? சிந்துப் புலாவ் வேண்டுமா? பம்பாய் ஹல்வா வேண்டுமா? இத்தாலிய மக்ரோனி வேண்டுமா? ஜப்பானியச் சுக்கி யாக்கி வேண்டுமா? சீனத்துச் சாப்சூய் வேண்டுமா? இராணி டீ வேண்டுமா? இங்கிலீஷ் தேசத்து உணவு வேண்டுமா? எது வேண்டுமானாலும் கிடைக்கும். பம்பாய்க்கு இது ஒரு சிறப்பு.

பல நாட்டு மனிதர்களைப் பம்பாயில் காணலாம். இப்பொழுது இத்தாலியரையும், ஜெர்மானியரையும் காண முடியாது. இவர்கள் பத்திரப்படுத்தி வைக்கப் பட்டிருக்கின்றனர். வேறு நீங்கள் யாரைப் பார்க்க வேண்டும்? அதோ அந்த வீதிக்குச் செல்லாதீர்கள். அந்த வீதிக்குப் போனால் பல்லைப் பிடுங்கி விடுவார் கள். பல்லைப் பிடுங்குவதிலே சீனர்களுக்கு இணை பம்பாயில் யாருமில்லை. இவர்களுடைய கடைகளிலே, ஒரு மனிதனுடைய படத்தை - அவன் உட்புறப் பற் கள் தெரியும்படியாக - மாட்டி வைத்திருப்பார்கள். அதைப் பார்க்கும் பொழுதே பயங்கரமாக இருக்கும். இவர்கள் பல்லைப் பிடுங்க ஆரம்பித்தால் எப்படி யிருக்கும்?

"வெளி நாட்டுக்குச் செல்கிற ஒவ்வொரு ஜப் பானியனும் உளவாளி" என்பது பழமொழி. எனவே இவர்களிடமும் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

இன்னொரு வீதிக்குச் செல்வோம். இந்த வீடு கள் என் புலிக் கூண்டுகள் போல, கம்பிகளால் அடைக்கப்பட்டிருக்கின்றன? இந்த வீதி, இந்தப்

பகுதி முழுதுமே அப்படித்தான் போலும்! இந்தக் கூண்டு வீட்டுக்குள் அடைக்கப்பட்டிருப்பது ஒரு வழுக்கி விழுந்த பெண் - தாஸி. இந்தப் பகுதி ஊருக்கு நடுவே இருக்கிறது. இந்தப் பகுதிக்கு நடுவே டிராம் வண்டி ஓடுகிறது. வீதியின் இரு பக்கத்திலும், மேலும் கீழும், (பெண்) புலிக் கூண்டுகள்.

லாமிங்டன் வீதிக்குச் செல்வோம். என்ன கூட்டம்! எவ்வளவு போக்கு வரத்து!! ஒரு நிமிஷம் அஜாக்கிரதையாக இருந்தால் மோட்டார் ஏறி விடும்.

இதோ பாருங்கள், வீரம் நிறைந்த மராட்டியப் பெண்கள்! அழகு நிறைந்த குஜராத்திப் பெண்கள்! ஆங்கில நாகரிகத்தில் அடியோடு மூழ்கிய பார்ஸிப் பெண்கள்! அகம்பாவம் பிடித்த ஆங்கிலோ இந்தியப் பெண்கள்! இவர்களெல்லாரும் எங்கே செல்கிறார்கள்? சினிமாவுக்குத்தான். இல்லையானால் இந்தியப் படங்கள் முப்பது வாரம் எப்படி ஓட முடியும்?

சினிமாத் தியேட்டர்களிலே சிறந்தது மூன்று. முதலாவது, அமெரிக்கருக்குச் சொந்தமானது. இரண்டாவதும் மூன்றாவதும் பார்ஸிக்காரருக்குச் சொந்தமானவை. பார்ஸிக்காரர்களில் பலர் தங்களை இந்தியர் என்று நினைப்பதில்லை. ஆங்கிலேயர்கள் இந்தியர்களுக்கு மேலானவர்களென்றும், தாங்கள் ஆங்கிலேயர்களுக்குச் சமமானவர்களென்றும் பல பார்ஸிகள் கருதுகிறார்கள். ஒரு நண்பர் "பார்ஸிகள் யூதர்களைப் போன்றவர். இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்ததும், இந்தப் பார்ஸிகளை, யூதர்களை ஹிட்லர் வெளியேற்றியதைப்போல் வெளியேற்ற வேண்டும்" என்றார். ஆனால் எனக்கு இதில் சிறிதுகூடச் சம்மதமில்லை. ஒரு வேளை பெரும்பாலான பார்ஸிகள் யூதர்

களைப் போலவே இருந்தாலும், அவர்களை ஹிட்லரைப் போல நாம் வெளியேற்றக் கூடாது. அப்படிச் செய்தால் கேவலம் ஹிட்லருக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்?

சினிமாவில் ஆரம்பித்த இந்த விஷயம் பார்ஸிகளில் முடிகிறது. வியாபாரத்தைப் பற்றி எழுதினால் குஜராத்திகளோடு முடியும்; ஆபீஸ் உத்தியோகங்களைப்பற்றி எழுதினால் மதராஸிகளோடு முடியும்.

மதராஸிகள் என்றால் தமிழர், தெலுங்கர், கன்னடர், மலையாளத்தார் எல்லோரும் தான். சுமார் முப்பதாயிரம் மதராஸிகளுக்கு மேல் பம்பாயில் வசிக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் **மாதுங்கா** என்ற விடத்தில் வசிக்கிறார்கள். சென்னையில் ஒரு பகுதியை ஆந்திராவுக்குக் கொடுப்பதானால், பம்பாயில் மாதுங்காவைத் தமிழ் நாட்டுக்குக் கொடுத்து விட வேண்டும்.

பொதுவாக, பம்பாய்க்காரர்களுக்கு - அதிலும் குஜராத்திகளுக்கு - மதராஸிகளைப்பற்றி மிகவும் கேவலமான அபிப்பிராயம். மதராஸிக்காரர்கள் ஆயிரக் கணக்காகப் பம்பாயில் முற்றுகை போடுகிறார்களென்பதும், மிகவும் குறைவான சம்பளத்தில் உத்தியோகத்துக்கு வந்து விடுகிறார்கள் என்பதும் குஜராத்திகள் கூறும் காரணம். எத்தனையோ குஜராத்திகள் நமது நாட்டில் வந்து வியாபாரம் செய்கிறார்களே, நாம் ஏதாவது கூறுகிறோமா? நூறு தமிழர்கள் பம்பாயில் சம்பாதித்து மீதம் பிடிப்பதைவிட, சென்னையில் வைர வியாபாரம் செய்யும் ஒரு குஜராத்தி அதிகமாக சம்பாதிக்க வில்லையா? தமிழர்கள் பிறர் வாழ்வதைக் கண்டு பொறுமை கொள்வதில்லை.

தாங்களும் வாழ வேண்டும், பிறரும் வாழ வேண்டும் என்பது தான் அவர்கள் சித்தாந்தம்.

பம்பாய்க்காரர்கள் மதராஸிகளை வெறுப்பதற்காக, மதராஸிகள் பம்பாயை வெறுக்கப் போவதில்லை. தமிழர்களுக்குப் பம்பாய் மீது எப்பொழுதும் நல்ல அபிப்பிராயம் உண்டு.

தாதாபாய் நௌரோஜியைப் பெற்றெடுத்தது பம்பாய். ஸர் பிரோஸ் ஷா மேத்தாவைப் பெற்றது பம்பாய். அன்னியத் துணி மறியலின் போது பாபுகன்னு என்னும் சிறுவன் மறியல் செய்து, மோட்டாரின் கீழ் மாண்டது பம்பாயில். தேசீய விஷயங்களில் மதராஸைப் போல எப்பொழுதும் முன்னணியில் நிற்பது பம்பாய். தமிழர்களுக்குத் தாய் நாட்டில் வேறுபாடு கிடையாது, எல்லாம் ஒன்றே.

ஆனால் இந்தப் பம்பாயைப்பற்றி நினைக்கும் பொழுதெல்லாம், இரவுகளிலே வீதிகளில் படுத்துறங்கும் அனாதைகளைப் பற்றித்தான் ஞாபகம் வருகிறது. இந்த அனாதைகள் போதாதென்று, வெளிநாட்டிலிருந்து ஆயிரக் கணக்கான வெள்ளை அனாதைகள் (refugees) இறக்குமதி யாகின்றனர். இந்த வெள்ளை அனாதைகளுக்கு வேலையும், சாப்பாடும், இருக்க இடமும் சீக்கிரத்தில் கிடைத்து விடுகின்றன. இந்த வெள்ளை அனாதைகளுக்கு விசேஷச் சலுகைகள் காட்டப்படுகின்றன. அனாதைகளிலுமா வித்தியாசம்? இந்த வெள்ளை அனாதைகளுக்குச் சௌகரியங்கள் செய்வதற்காகச் சிரமப்படும் காருண்யம் நிறைந்த அரசாங்கமும், பெரிய மனிதர்களும், கமிட்டிகளும், பம்பாயிலுள்ள நிரந்தர உள்நாட்டு அனாதைகளைப்

பற்றிக் கொஞ்சமாவது கவலை எடுத்துக் கொள்ள மாட்டார்களா என்றுதான் பலரும் எண்ணு கிறார்கள்.

பாவம்! இந்த அனாதைகள் என்ன செய்வார்கள்! 'பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த காந்தி' ஒருவரைத் தான் அவர்கள் நம்பி யிருக்கிறார்கள்.

# 7. ரெயில் பிரயாணம்

நமது நாட்டில் பல பணக்காரர்கள் மூன்ருவது வகுப்பில் பிரயாணம் செய்கிருர்கள். இவர்களைப் பார்த்து, "நீங்கள் எல்லாம் மூன்ருவது வகுப்பில் பிரயாணம் செய்யலாமா?" என்று கேட்டால், இவர்களிற் சிலர், "நான்காவது வகுப்பு ஒன்று இருந்தால் அதில்கூடப் பிரயாணம் செய்வோம்" என்று கூறுகிருர்கள். ஆனல் நான்காவது வகுப்பு ஒன்று இருப்பது இவர்களுக்குத் தெரியாதுபோலும்! இந்தோ-சீனவில் ரெயிலில் நான்கு வகுப்புக்கள் இருக்கின்றன. நான்காவது வகுப்பு, கூட்ஸ் வண்டியைப் போல இருக்கும். இதில் பிரயாணிகள் உட்காருவதற்கு எவ்விதமான ஆசனமும் இராது. கீழே உட்காரவேண்டும்; அல்லது நிற்கவேண்டும். இவ் வண்டிகளில் சில சமயங்களில் கால் நடைப் பிராணிகளையும் ஏற்றிச் செல்வார்கள். உலகிலேயே இந்தோ-சீன ரெயில்வேக்காரர்கள்தாம், "காக்கை குருவி எங்கள் ஜாதி" என்ற கொள்கையை நடைமுறையில் கடைப்பிடிக்கிருர்கள்.

*　　　*　　　*

தாய்லந்து என்று அழைக்கப்படும் சியாம் தேசத்தின் போக்கே எப்போதும் தனிப்பட்ட மாதிரியாக இருக்கும். சியாம் தேசத்து ரெயில்வேக்களில் கைகாட்டிகள் வைத்திருக்கிருர்கள். ஆனல்

ரெயில் வரும்போது இவர்கள் கைகாட்டியை இறக்கு வதில்லை. அதற்கு மாருகக் கைகாட்டியை மேலே தூக்குவார்கள். கைகாட்டிகள் மேலே தூக்கப்பட்டால்தான் ரெயில்கள் உள்ளே வரலாம்.

* * *

சாதாரணமாக ரெயிலில் தாங்க முடியாத பெருங்கூட்டம் என்று நாம் சொல்லுகிருேம். ஆனல் நார்வே தேச வாசிகள், ரெயிலில் கூட்டம் என்று ஒருபொழுதும் சொல்வதே இல்லை. ரெயிலில் எத்தனை பேர் உட்காரலாமோ அத்தனை பேருக்குத்தான் டிக்கட் கொடுப்பார்கள்; அத்தனைபேர்தான் உட்கார முடியும். நார்வேயில் எந்த வகுப்புப் பிரயாணியும் இரண்டு டிக்கட்டுகள் வாங்கவேண்டும். ஒன்று, பிரயாணம் செய்வதற்குரிய டிக்கட். மற்றென்று' எந்த இடத்தில் உட்காருவது என்பதற்காக உள்ள 'ரிஸர்வேஷன் டிக்கட்.' 'ரிஸர்வேஷன் டிக்கட்'டுக்குச் சொற்ப தொகைதான் வாங்குகிருர்கள். இந்த டிக்கட்டு இல்லாமல் யாரும் பிரயாணம் செய்ய முடியாது. மூன்ருவது வகுப்பு 'ரிஸர்வேஷன் டிக்கட்'டிலுங்கூட வண்டியின் எண், உட்காரவேண்டிய இடத்தின் எண் ஆகியவை காணப்படும். ஒவ்வொரு பிரயாணியும் தனக்கென்று குறிப்பிட்ட இடத்தில்தான் அமரவேண்டும்.

* * *

இந்தியாவில் ராஜாக்களும் மந்திரிகளுந்தான் ரெயிலில் தனிக் கம்பார்ட்டுமெண்டுகளில்(Reserved) பிரயாணம் செய்கிருர்கள். இந்த அதிருஷ்டம் நமக்கு இல்லாவிட்டாலும் தென்னப்பிரிக்காவில் இருக்கிறது. தென்னப்பிரிக்காவில் மிக வேகமான ரெயில்

கள் மணிக்கு 25 மைல் தூரந்தான் செல்லும். இந்த அற்புத ரெயில்களிலே வெள்ளைய ரல்லாதாருக்கு எல்லா வகுப்புக்களுக்கும் தனி 'ரிஸர்வ்டு கம்பார்ட் மெண்டு' கள் உண்டு. இந்தத் தனிக் கௌரவத்திற்கு அதிகக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. சாதா ரணக் கட்டணமே போதுமானது.

*　　　*　　　*

மூன்ருவது வகுப்புப் பிரயாணிகளுக்குப் பசியே இராது என்று இந்திய ரெயில்வேக் கம்பெனிக்காரர் கள் திட்டமான முடிவு செய்திருப்பதாகத் தெரி கிறது. இந்திய ரெயில்களில் உணவருந்துவதற்காகத் தனி வண்டிகள் (Dining Car) சேர்க்கிருர்கள். இந்த வண்டிகளை முதலாவது இரண்டாவது வகுப்புப் பிரயாணிகள்தாம் உபயோகிக்கலாம் என்று கூறு கிருர்கள். மற்ற வகுப்புப் பிரயாணிகள் ஏறிஞல் இரண்டாவது வகுப்புக் கட்டணம் வசூலித்து விடுகிருர்கள். இந்தத் தாராள மனப்பான்மை ஜப் பான், அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாட்டு ரெயில்வேக்களுக்கு இல்லை. அந்த நாடுகளில் ரெயிலில் பிரயாணம் செய்யும் அனைவருக்கும் சாப்பாட்டு வண்டியை உபயோகிக்கும் உரிமை உண்டு.

*　　　*　　　*

'காமிரா ஸ்பெஷலை' ப் பற்றிக் கேள்விப்பட் டிருக்கிறீர்களா? இந்த ரெயில்கள் அமெரிக்காவில் தான் உண்டு. விடுமுறைத் தினங்களில், இயற்கை வனப்புள்ள இடங்களுக்கு இந்தக் 'காமிரா ஸ்பெஷல்' செல்லும். போட்டோ காமிரா வைத்தி ருப்பவர்களே இதில் பிரயாணம் செய்ய அனுமதிக்

கப்படுவார்கள். இதில் பிரயாணம் செய்வதற்குக் கட்டணம் மிகச் சொற்பம். ரெயிலிலேயே ஒரு கம்பார்ட்மெண்டில் போட்டோ சாமான்கள் விற்கப்படும். போட்டோக்களை 'டெவலப்' செய்வதற்கு இருட்டறையும் அந்தக் கம்பார்ட்மெண்டிலேயே உண்டு. 'காமிரா ஸ்பெஷ'லில் கார்டு முதல் கரி தள்ளுபவன் வரையில் கையில் காமிரா வைத்துக் கொண்டு படமெடுப்பார்கள். இந்த ரெயிலில் டிக்கட் இல்லாமல்கூடப் பிரயாணம் செய்யலாம்; ஆனால் கையில் காமிரா இல்லாமல் பிரயாணம் செய்ய முடியாது!

* * *

இங்கிலாந்து தேசத்து ரெயில்களில் மூன்றாவது வகுப்புக்கூட மிகவும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருக்கின்றது. இந்த வண்டிகளில், அந்த நாட்டின் அழகிய காட்சிகளடங்கிய போட்டோப் படங்களை வைத்திருக்கிறார்கள். ஆனால் நமது நாட்டு ரயில்வே நிலயங்களில் தப்பித் தவறிப் பார்த்துவிட்டால், "திருடர்கள் ஜாக்கிரதை", "துப்பு இங்கே", "ஐரோப்பியர்களுக்குத் தனி இடம்" என்பன போன்றவைகளைத்தான் காண்கிறோம்.

* * *

ரெயில்களிலே பலவிதங்கள் உண்டு. அவைகளிலே மலை ரெயில் ஒன்று. பினங்கு, ஹாங்காங், புன்சல் (அட்லாண்டிக் சமுத்திரத்தில் போர்த்துக்கீசியருக்குச் சொந்தமான மதீராத் தீவின் தலைநகர்) முதலிய இடங்களில் இந்த ரெயில்களைப் பார்க்கலாம். இந்த ரெயில்களில் பிரயாணம் செய்வோர், வழியிலுள்ள பூங்கொத்துகளையும், சில சமயங்களில் பழங்

களையுங்கூட வண்டியில் இருந்தபடியே பறித்துச் செல்வர்.

* * *

பூமிக்குக் கீழே ஓடும் ரெயில்கள் மற்ருெரு வகை. லண்டன், நியூயார்க், பாரிஸ், பெர்லின், மாஸ்கோ, டோக்கியோ போன்ற நகரங்களில் இவைகளை அமைத்திருக்கின்றனர். லண்டனில், ஜெர் மன் விமானங்கள் குண்டு போடும்போது லட்சக் கணக்கான மக்கள் இந்தப் பூமிக்குக் கீழுள்ள ரெயில் பாதைகளில்தான் தங்கி உயிர் பிழைக்கின்ற னர். பம்பாய், கல்கத்தா, சென்னை முதலிய நகரங் களில் இம்மாதிரி அமைத்திருந்தால் விமானப் படையெடுப்பின்போது ஒளிந்து கொள்ளலாம். ஆனல் அந்த வசதியையும் 'ஆண்டவன்' நமக்குக் கொடுக்கவில்லை. இந்தப் பூமிக்குக் கீழுள்ள ரெயில் கள் பெரும்பாலும் வேகமாகச் செல்லும். இதிலே அதிவேகமாக ஓடுபவை அமெரிக்க ரெயில்களே. பூமிக்குக் கீழ் 60 மைல் வேகத்திலும் பூமியின்மேல் 100 மைல் வேகத்திலும் அமெரிக்க ரெயில்கள் செல்லுகின்றன.

* * *

பூமிக்குக் கீழே ரெயில்கள் ஓடுவதைப்போலப் பூமியிலும், பூமிக்கு மேலேயும் ரெயில்கள் ஓடுகின் றன. பூமிக்கு மேலே செல்லும் ரயில்களுக்கு எலிவேடட் ரெயில்வே (Elevated Railway) என்று பெயர். நகருக்கு மத்தியிலே வீதியில் இரண்டு அல்லது மூன்று ஆள் உயரத்தில் மைல் கணக்காகப் பாலங்கட்டி அதன் மேலே இந்த ரெயில்களை ஓட்டு கிருர்கள்.

* * *

ஆகாய ரெயில் மற்றொரு வகை. இதனை 'ரோப் ரெயில்வே' (Rope Railway) என்றும் கூறுவர். ஸ்விட்சர்லந்து, ஆஸ்திரியா, ஜப்பான் முதலிய நாடுகளில் இவை சர்வ சாதாரணம். மின்சாரத்தால் இயக்கப்பெறும் இந்த ரெயில்கள் மலைக்கு மலை செல்லும். ஒரு மலைக்கும் மற்றொரு மலைக்கும் உள்ள இடைவெளியில் கனத்த இரும்புக்கம்பி கட்டியிருப்பார்கள். இந்தச் சிறிய ஆகாய ரெயில் அதில் தொங்கிக்கொண்டிருக்கும். இதில் எட்டு அல்லது பத்துப் பிரயாணிகளே ஏறலாம். ஒரு மலையிலிருந்து மற்றொரு மலைக்குச் செல்லும்போது கீழே பார்த்தால் பயங்கரமாகவும், ஆனால் சந்தோஷமாகவும் இருக்கும்.

* * *

ஓடுகிற ரெயிலிலே நீங்கள் சினிமா பார்த்திருக்கிறீர்களா? லண்டனிலிருந்து ஸ்காட்லாந்து பிரதேசங்களுக்குச் செல்லும் இரவு ரெயில் வண்டிகளில் சினிமாப் படம் காட்டுகிறார்கள். இதற்காக தனி கம்பார்ட்மெண்ட் சேர்க்கிறார்கள். புரோகிராம் ஒரு மணி நேரம். செய்திப் படம், அறிவு வளர்ச்சிக்கான சிறு படங்கள், வேடிக்கை கார்ட்டூன்கள் முதலியன காண்பிக்கிறார்கள். இந்த ஓடும் ரெயிலில் சினிமாப் பார்ப்பதற்குக் கட்டணம் முக்கால் ரூபாய் தான்!

* * *

சமுத்திரத்திலே செல்லும் ரெயில்களும் உண்டு. ரெயிலில் நாம் ஏறிக்கொள்கிறோம்; ரெயில் கப்பலில் ஏறிக்கொள்ளுகிறது. பாரிஸுக்கும் லண்டனுக்கும் இடையே இந்த ரெயில்கள் ஓடுகின்றன. இதில்

பிரயாணம் செய்யச் சாதாரணக் கட்டணத்தைப் போல இருமடங்கு செலுத்த வேண்டும். இந்த ரெயில்கள் ஸ்டீல் என்னும் உலோகத்தினுல் அமைக்கப் பெற்றுள்ளன. படுக்கைகளுக்குக் கீழே நிறைய வில் (Spring) வைத்திருக்கிருர்கள். இரவு ஒன்பது மணிக்குப் பாரிஸைவிட்டுப் புறப்பட்டால் மறுநாள் காலை ஒன்பது மணிக்கு லண்டனை அடைகிருேம். ஆனுல் இருபது மைலுக்கு மேலுள்ள இங்கிலீஷ் சானல் என்னும் கடலில் நமது ரெயில், கப்பலிலே பிரயாணம் செய்வதை நாம் பார்ப்பதேயில்லை !

# 8. பீஜப்பூர்

பீஜப்பூர் எங்கே யிருக்கிறது? இந்தக் கேள்வியை யாராவது 17-ஆவது நூற்றுண்டில் கேட்டிருந்தால், அவனை ஒரு பைத்தியக்காரன் என்று கூறிவிடுவார்கள். ஏனென்றுல், அந்த நாளில் பீஜப்பூர் ஒரு சாம்ராஜ்யத்தின் தலை நகராகத் திகழ்ந்தது. இப்பொழுது பீஜப்பூர் எங்கே யிருக்கிறதென்று கண்டு பிடிக்க ரெயில்வே படத்தைத்தான் பார்க்க வேண்டியிருக்கிறது.

எம். எஸ். எம். ரெயில்வேயில் ஷோலாப்பூர் - கடக் லைனில், சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த நகரம் அமைந்திருக்கிறது. பொதுவாக, சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களுக்கு, குறிப்பிட்ட ரெயில்வே ஸ்டேஷன்களிலிருந்து சில மைல் தூரம், கட்டை வண்டியிலோ அல்லது நடந்தோதான் செல்ல வேண்டியிருக்கும். ஆனுல், பீஜப்பூரைப் பொறுத்த வரையில், அந்தச் சிரமம் கிடையாது. ஊருக்கு ஒரு மைல் தூரத்திலேயே, ரெயில்வே ஸ்டேஷனை அமைத்திருக்கிருர்கள்.

எம். எஸ். எம். ரயில்வேயில் மிகப் பழைய வண்டிகளை உடைத்தெறிவதற்கு முன், இந்த லைனில்தான் ஓட்டுகிருர்களென்று நினைக்க வேண்டி யிருக்கிறது. நாலரை மணி நேரத்தில் 58 மைல் செல்லக் கூடிய

'வேகமான' ரெயில் வண்டிகள் இங்கே ஓடுகின்றன. ஜனங்களுக்கு மிகவும் சௌகரியமான நேரங்களில் ரெயில் வண்டிகளை விடுவதாக, ரெயில்வேக்காரர்கள் விளம்பரப் படுத்துகின்றனர். இந்தச் சௌகரியமான வண்டிகளில் ஒன்று இரவு 2½ மணிக்கு பீஜப்பூரை விட்டுப் புறப்படுகிறது. பத்திரிகைக்காரர்களும் சினிமாக்காரர்களும் தான் பொய் சொல்லுகிறார்கள் என்று இதுவரை நினைத்தோம். இனி ரெயில்வேக்காரர் களையும் இந்த வரிசையில் சேர்த்துக் கொள்ளலாம்.

பீஜப்பூர், கடக் லைனில் இருப்பதாகக் கூறினே னல்லவா? கடக் என்பது ஒரு பெரிய ஜங்ஷன். எம். எஸ். எம். ரெயில்வேயின் முக்கியமான, 'வொர்க் ஷாப்'களில் ஒன்று இங்கே இருக்கிறது. இந்த ஊருக்கு கடக் என்று ஏன் பெயர் வைத்தார்கள்? எம். எஸ். எம். ரெயில் வண்டிகள் 'கடக், கடக்' என்று பெரும் சப்த மிட்டுச் செல்கின்றனவே, அதன் நினைவாக இந்தப் பெயரை ஒரு வேளை வைத் தார்களோ, என்னவோ?

பீஜப்பூர் ரெயில்வே ஸ்டேஷன் நடுத்தரமானது. ஸ்டேஷனுக்கு வெளியே சுமார் 60 டோங்காக்கள் காத்திருக்கின்றன. நமது ஊரில் ஜட்காவைப் போல, அந்த ஊரில் டோங்கா. இந்த டோங்காக்களை இழுப் பது குதிரைகள் தான்; சந்தேகமில்லை. இந்த டோங் காக்களிலே ஒரு விசேஷம். மழையைப் பற்றியோ, வெயிலைப் பற்றியோ அல்லது தெருப் புழுதியைப் பற்றியோ நாம் கவலைப்பட வேண்டிய அவசியமே யில்லை. ஏனெனில், கவலைப்பட்டுப் பயனில்லை; இவை களிலிருந்து நம்மைப் பாதுகாக்க, டோங்காவில் எவ் விதமான வசதியும் கிடையாது.

எனது டோங்கா வாலா இப்ராஹீம் சுறு சுறுப்பான வாலிபன். அவன் குடும்பம் பெரியது. அவர்கள் மூன்று விதமான தொழில் செய்கிறார்கள். அவனுக்கு நான்கு பாஷைகள் தெரியும். ஐந்து வண்டிகளும் ஆறு குதிரைகளும் அவனிட மிருக்கின்றன. அவனோடு உடன் பிறந்தவர்கள் ஏழு பேர்.

மூன்று தொழில்களிலே குதிரை வண்டி ஓட்டும் தொழிலும் ஒன்று. நான்கு பாஷைகள் தெரிந்த முஸ்லீமாக இருந்தும், அவன் உத்தியோகத்துக்கு முயற்சி செய்யவில்லை. சுதந்திரம் வேண்டும் என்கிறான். உத்தியோகத்துக்குச் சென்றால் சுதந்திரம் கிடைக்காது என்று ஒரு டோங்கா வாலா சொல்வதை, எத்தனை சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஏற்றுக் கொள்வார்கள்?

பழமையின் பெருமைகளிலே மகிழும் இந்தியர்களுக்கு, பீஜப்பூர் ஒரு முக்கியமான இடம். ஹம்பியைப் போல, இந்த ஊர் குட்டிச் சுவராகி விடவில்லை. எங்கே பார்த்தாலும், கல்லறைகளும் சமாதிகளும் மசூதிகளும் காணப்படுகின்றன.

இந்த ஊரைப்பற்றிச் சரித்திரம் என்ன கூறுகிறது? 1451-ம் ௵ துருக்கியில் சுல்தான் மூரத் காலமானார். அவருடைய குமாரன் மகமது, சுல்தான் ஆனார். மகமதுவுக்கு, யூசுப் என்றோர் இளைய சகோதரன். துருக்கியின் அந்தக் கால வழக்கப்படி, சுல்தானின் சகோதரர்கள் அனைவரையும் கொன்று விடுவது வழக்கம். அம்மாதிரியே யூசுபையும் கொல்ல வேண்டுமென்று மந்திரிகள் மகமதுக்கு யோசனை கூறினார்கள். தனது இளைய குமாரனை யூசுபின் மீது அளவு கடந்த அன்பு கொண்ட அவனது

அன்னை, அழகான ஓர் அடிமைப் பையனைப் பிடித்து, யூசுபைப் போல் வேஷம் போட்டு, அவனைக் கொல்லச் செய்தாள். உண்மையான யூசுப் 1460-ஆம் ஷு இந்தியாவுக்கு ஓடி வந்தான்.

பீதார் சுல்தான் முகமது பஹாமனி யிடம், யூசுப் வேலைக் கமர்ந்தான். ஆந்திர நாட்டில் எதிரிகளை முறியடித்து யூசுப் பேர் பெற்முன். யூசுபுக்கு ஐந்து பட்டணங்களை பீதார் சுல்தான் இனமளித்து, அவனைப் பீஜப்பூர் கவர்னர் ஆக்கினன். பீதார் சுல்தானின் மரணத்துக்குப் பின், யூசுப் 1489-ஆம் ஷு தனது சைன்ய பலத்தால், தன் சுதந்திரத்தை ஸ்தாபித்துக் கொண்டான்.

1489-முதல் 1686-ஆம் ஷு வரையில், இந்தப் பரம்பரையினர் பீஜப்பூர் ராஜ்யத்தை ஆண்டனர். முகலாய வழக்கப்படி, கல்லறைகளும் சமாதிகளும் பெரிதாக அமைப்பதிலே பீஜப்பூர் ராஜாக்கள் ஒவ்வொருவரும் போட்டி போட்டனர். அதன் விளைவாகத்தான், உலகில் பெரிய கோல் கும்பஸ் எனும் 'டோம்,' பீஜப்பூரில் கட்டப் பட்டிருக்கிறது.

உலகிலே மிகப் பெரிய இந்த டோமின் (Dome) விஸ்தீர்ணம் 18,110 சதுர அடி. இதற்கு அடுத்தபடியாக உள்ள பெரிய டோம், இத்தாலியின் தலைநகரான ரோம் எனும் பட்டணத்தில் இருக்கிறது. பாந்தியன் எனப் பெயர் கொண்ட அந்த டோமின் விஸ்தீரணம் 15,833 சதுர அடி தான்.

கோல் கும்பஸின் உயரம் $198\frac{1}{2}$ அடி. இந்தக் கட்டிடத்தின் மேல் பாகத்திலுள்ள டோமின் அகலம் 124 அடி. இந்த டோமுக்கு ஆங்கிலத்தில்

Whispering gallery (முணு முணுக்கும் கூடம்) என்று பெயர். வட்ட வடிவமாயுள்ள இந்த டோமின் தாழ்வாரத்தில் நின்று கொண்டு நாம் பேசினால், நமது ஒவ்வொரு சொல்லும் குறைந்தது ஏழு முறை எதிரொலி செய்யும். சுவரில் மெதுவாகப் பேசினால் நாம் பேசுவது எதிர்ப் புறத்துச் சுவரில் டெலிபோன் மாதிரி கேட்கும். ஒரு கடிகாரத்தைச் சுவரின் ஓரத்தில் வைத்தால்; எதிர்ப்புறத்துச் சுவரில் கடிகாரச் சப்தத்தை நன்றாகக் கேட்கலாம். இந்த இரண்டு சுவருக்கும் இடையிலே உள்ள தூரம் 124 அடி என்பதை நினைக்கும் பொழுது, இதனை உலக அதிசயங்களில் ஒன்றாகவே கூறலாம்.

பீஜப்பூரில் பார்க்க வேண்டிய முக்கியமான இடங்களில் ஒன்று ஜும்மா மசூதி. ஒரே சமயத்தில் 2,500 பேர்கள் தொழுவதற்குப் போதிய இடம் அங்கே இருக்கிறது. அந்தக் காலத்துக் கலைச் சிறப்பை விளக்கக் கூடிய அரிய சித்திர வேலைப்பாடுகளை இந்த மசூதியில் காணலாம்.

மேத்தர் மகால் என்றொரு கட்டிடம் இருக்கிறது. இதைப் பற்றிக் கூறப்படும் கதை ருசிகரமானது. இப்ரஹீம் அரசருக்குக் குஷ்ட நோய் இருந்ததாம். அதற்குப் பரிகாரம் தேடுவதற்காக, தமது அரண்மனை ஜோஸியரை அழைத்து இப்ரஹீம் ஆலோசனை செய்தார். அரண்மனை ஜோஸியர் அரசனைப் பார்த்து, "மன்னரே! நாளைய தினம் நீங்கள் யாரை முதன் முதலில் சந்திக்கிறீர்களோ, அவருக்கு ஏராளமான திரவியத்தைக் கொடுக்க வேண்டும். அது தான் இதற்குப் பரிகாரம்" என்றார். ஜோஸியர் தாமே மறு நாள் காலையில் அரசனைச் சந்தித்து இந்

தத் திரவியத்தைப் பெற எண்ணியிருந்தார். ஆனால் விஷயம் வேறு விதமாக முடிந்தது.

அரசன் அதி காலையில் எழுந்து வெளியே வந்தான். முதலில் ஒரு மேத்தரைச் (தெருப் பெருக்கும் சகோதரன்) சந்தித்தான். மேத்தருக்கு அடித்தது அதிர்ஷ்டம். அரசன் கொடுத்த பொருளைக் கொண்டு, மேத்தர் ஒரு மகால் கட்டினன். அது தான் மேத்தர் மகால். இந்தக் கதை எவ்வளவு தூரம் உண்மை என்பது நமக்குத் தெரியாது. ஆனால் கேட்பதற்கு வேடிக்கையாக இருக்கிறது.

மல்லிக் - இ - மைதான் என்ற பீரங்கியும், இப் ரஹீம் ரஸா என்ற சமாதியும் மற்றும் சில இடங்களும் பீஜப்பூரில் முக்கியமாகப் பார்க்கத் தகுந்தவை. பீஜப்பூர் இரண்டு சினிமாக் கொட்டகைகள் உள்ள ஒரு மட்டமான பட்டணம். 1941-ஆம் வருஷத்தில் ஜனத்தொகை 20,000. கொசுவின் தொகை அந்த ஊர் வாசிகளுக்கே தெரியாது. முசாபரி பங்களாவில் கொசு வலை கொடுக்கிறார்களே அதற்கு மட்டுமே, தினசரி கட்டணம் ரூபாய் ஒன்றே முக்கால் கொடுக்கலாம்.

கன்னடம், தெலுங்கு; மராத்தி, ஹிந்துஸ்தானி ஆகிய பாஷைகளைப் பேசும் மக்களுள்ள இந்த நகரில் ஆங்கிலம் பேசுகிறவர்களும் இருக்கிறார்கள்.

பீஜப்பூரைப் பற்றி நினைக்கும் பொழுது, மாடியில்லாத வீடுகளும் வியாபாரமில்லாத கடைத் தெருவும் தான் ஞாபகத்துக்கு வருகின்றன.

## 9. கோவா

கோவா என்றதும் பால் கோவா ஞாபகம்தான் வருகிறது. ஆனால், நான் இங்கே எழுதுவது பால் கோவாவைப் பற்றி யல்ல; நமது நாட்டிலே போர்ச்சுகீசியருக்குச் சொந்தமான கோவா (Goa) என்னும் பிரதேசத்தைப் பற்றித்தான்.

வெஸ்டர்ன் இந்தியன் போர்ச்சுகீஸ் ரெயில்வே என்பது ஒரு கம்பெனி. பெயர்தான் நீளமாக இருக்கிறதே தவிர, இந்த ரெயில்வேயின் நீளம் சுமார் ஐம்பது மைல்தான். ஐம்பது மைலே யானாலும், அழகிய பல காட்சிகளைக் காண்கிறோம். மலைகளின் மீது குகைகளைக் கடந்து, இந்த வேகமில்லாத ரெயில் 'கடக், கடக்' என்று செல்லும். 'கடக்' என்றால், எம். எஸ். எம். ரெயில்வேயின் ஞாபகம் வருகிறதல்லவா? இந்த வெஸ்டர்ன் இந்தியன் போர்ச்சுகீஸ் ரயில்வேயையும் நமது எம். எஸ். எம். கம்பெனியார்தான் நிர்வகிக்கிறார்கள்.

கோவாவுக்குச் செல்லும் வழியிலே, சமுத்திர மட்டத்திலிருந்து 3,000 அடி உயரமுள்ள மலையில் ரெயில் செல்கிறது. வழியிலே அழகான பெரிய நீர் வீழ்ச்சி ஒன்றிருக்கிறது. அதற்குப் 'பால் நீர் வீழ்ச்சி' என்று பெயர். "பெயர்தான் பால் நீர் வீழ்ச்சி; ஆனால், அது தண்ணீர்தான்" என்றார் எனக் கருகிலிருந்த ஒரு பிரயாணி. அவர் ஒரு

கோவாக்காரர். எனவே, இவ்வாறு அவர் கூறிய
தைக் குறித்து, நான் சிறிதும் ஆச்சரியப்படவில்லை.

கோவானியர்கள் முதல் தரமான சமையல்காரர்கள். இந்தச் சமையல்காரர்களின் மூலமாகத்தான் கோவாவை நான் அறிமுகப்படுத்திக் கொண்டேன். வெளி நாடுகளுக்குச் செல்கிற பல கப்பல்களிலே இந்திய உணவுகளைத் தயாரிப்பவர்கள், இந்தக் கோவானியர்கள்தான். நியூயார்க்கில் ஓர் இந்திய உணவுச் சாலையில் சமையல் செய்பவரும் ஒரு கோவானியர்தான். சமையல் செய்வது கோவானியருக்குப் பிறப்புரிமை போலும்!

ஏழ்மைக்கு முதன்மை ஸ்தானம் எங்கே கொடுக்கலாம் என்று கேட்டால், கோவாதான் ஞாபகத்துக்கு வரும். மாடியில்லாத வீடுகள், களையில்லாத முகங்கள், செல்வம் இல்லாத மக்கள், சினிமா இல்லாத ஊர்கள், வியாபார மில்லாத துறைமுகம், வேகமில்லாத ரெயில், தங்குவோர் இல்லாத ஹோட்டல்கள் முதலியவைகள் நிறைந்ததுதான் கோவா.

மார்ம கோவா என்பது துறைமுகம். இது இயற்கையிலேயே நன்ருக அமைந்திருக்கிறது. சென்ற வருஷம் அங்கே சென்ற பொழுது மூன்று ஜெர்மன் கப்பல்களைக் கண்டேன். அந்தக் கப்பல்கள் இந்தத் துறைமுகத்திலே சிறைப் படுத்தப் பட்டிருக்கின்றன. கப்பலிலுள்ள ஜெர்மானியர்கள் அடிக்கடி கரைக்கு வந்து குடித்து விட்டுச் செல்வார்கள்.

மார்ம கோவாவிலே இரண்டு பெரிய ஹோட்டல்கள் இருக்கின்றன. ஒன்று கடற்கரைக்குச் சில கஜ தூரத்தில் இருக்கிறது. ஒரு காலத்தில் இந்த ஹோட்டல் மிகப் பிரபலமாக இருந்ததாம். இப்

பொழுது அதன் பழம் பெருமையைக் காட்டும் சின்னங்கள்தான் அங்கே யிருக்கின்றன. ஆடுகிற கட்டில், உடைந்துபோன நாற்காலி, சுறு சுறுப்பில்லாத வேலையாட்கள், ஓடாத மின்சார விசிறி, எறியாத மின்சார விளக்குகள், எல்லாவற்றுக்கும் மேலாக, சுத்தம் செய்யப் படாத அறை, கப்பலில் மூன்ருவது வகுப்பிலிருப்பது போன்ற ஒருவித நாற்றம் இவை யனைத்தும் கொண்டது அந்த ஹோட்டல். உணவு வேண்டுமென்ருல், முதல் நாளே கூறிவிட வேண்டும். 'உணவில் சுவையே கிடையாது' என்று நாம் கூறுவதற்கு முன், வேலைக்காரன் மாயமாய் மறைந்து விடுவான்.

இந்த ஹோட்டலிலே குளிப்பதற்காகச் செய்திருக்கும் ஏற்பாடுகள் விநோதமானவை. குளிக்கும் அறையில், தகரத்தால் செய்த நீளமான வாளி ஒன்றைக் கயிற்றில் கட்டித் தொங்கவிட் டிருக்கிருர்கள். இந்த வாளி பூமியிலிருந்து சுமார் நாலு அடி உயரத்தில் தொங்கிக்கொண் டிருக்கும். இந்த வாளியில் தண்ணீரை நிரப்பியிருப்பார்கள். அதிலிருந்து நாம், ஒரு சிறிய பாத்திரத்தால், தண்ணீரை எடுத்து மேலே ஊற்றிக்கொள்ள வேண்டும்.

இவ்வளவு சௌகரியமாக ஸ்நானம் செய்து விட்டு, ஹோட்டலுக்கு வெளியே வந்த பொழுது, மூன்று ஜப்பானியர்கள் உட்கார்ந்து கொண்டு, பஸ் வருவதற்காகக் காத்திருந்தார்கள். வாஸ்கோட காமா என்பது கோவாவிலுள்ள பெரிய ஊர்களில் ஒன்று. மார்ம கோவாத் துறைமுகத்திலிருந்து இந்த ஊர் நான்கு மைல் தூரத்திலிருக்கிறது. இந்த ஊருக்கு ஆறு மணிக் கொரு ரெயிலும், மூன்று மணிக்

கொரு மோட்டார் பஸ்ஸும் தான் செல்லும். இந்த பஸ்ஸுக்காகக் காத்திருந்த மூன்று ஜப்பானியர் களும், அன்றைய தினம் துறைமுகத்துக்கு வந்த ஒரு ஜப்பானியச் சாமான் கப்பலில் வேலை பார்ப்பவர்கள். இவர்களருகே சென்று, பஸ் வர நேரமாகுமென்றும், ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வாஸ்கோடகாமா ஸ்டே ஷன் மாஸ்டருக்கு டெலிபோன் செய்தால் அவர் அங்கேயிருந்து ஒரு டாக்ஸியை அனுப்புவார் என் றும், டாக்ஸிக்கு ஒன்றே கால் ரூபாய் வாடகையாகு மென்றும் அரை குறையான ஜப்பான் பாஷையில் உளறினேன். அந்தக் குள்ளர்கள் மிகவும் சந்தோ ஷப் பட்டார்கள். டாக்ஸிக்கு ஈவுப்படி பணம் கொடுத்தோம்.

பஞ்சிம் என்பதுதான் கோவாவின் தலை நகர். மார்ம கோவாவிலிருந்து சிறிது தூரம் கடல் வழியா கச் சென்று அக்கரை சேர்ந்து, பிறகு மோட்டாரில் செல்லவேண்டும். கடல் பிரயாணம் சுமார் 3 மைலும் கரைப் பிரயாணம் சுமார் 10 மைலுமிருக்கலாம். பஞ்சிம் நகரம் ஒரு துறைமுகமும் கூட. ஆனால், சிறிய கப்பல்கள்தான் இங்கே வரலாம்.

இந்த ஊரில் எங்கே பார்த்தாலும் 'டாவர்ன்கள்' (Taverns) இருக்கின்றன. சாராயக் கடைக்குப் போர்ச்சுகீஸ் பாஷையிலும் 'டாவர்ன்' என்றே பெயர். இந்தக் கடைகளுக்குப் பொதுஜன ஆதரவு மிக அதிகம். இங்கே தாய்நாட்டின் (போர்ச்சுக்கல்) உயர்ந்த சரக்குகளையும் விற்பனை செய்கிறார்கள். இந்தச் சாராய வகைகள், மற்ற இடங்களை விட இங்கே மிக மலிவாகக் கிடைக்கும். பம்பாய் மகா ணத்தில் பூரண மதுவிலக்கு அமுலி லிருந்த பொழுது

வழக்கமான பெருங் குடியர்களுக்கு இந்த ஊர்தான் அபய மளித்தது. குடிப்பதற்காக மட்டும் இந்தப் பிரபுக்கள் நூற்றுக் கணக்கான மைல் கப்பலில் பிரயாணம் செய்து இந்த நகருக்கு வருவார்கள். பொதுவாக, பஞ்சிம் நகரத்தைக் குடியர்களின் சுவர்க்கம் என்று கூறலாம்.

கோவாக்காரர்களுக்கு மீனும் சோறும்தான் ஆகாரம். சோறில்லா விட்டாலும் பாதகமில்லை; மீன் மட்டும் இருக்க வேண்டும். பஞ்சிம் நகரத்திலே பிரபலமான ஒரு ஹோட்டலுக்குச் சென்றேன். அங்கே என்ன இருந்தது? சூப் முதல் கடைசிவரை எல்லாம் மீன் சம்பந்தப்பட்டவை தான்!

கோவாவில் மிகவும் குறிப்பிடத்தக்கது, சில நூற்றுண்டுகளுக்கு முன்னே கட்டப்பெற்ற பிரபலமான கத்தோலிக்க மடம். இதனை ஸ்தாபித்த பெரியாரான பாதிரி காலஞ் சென்றுவிட்டார். அவரைப் பெரிய மகான் என்று கொண்டாடுகிருர்கள். அவருடைய பிரேதத்தைப் பக்குவமாக வைத்திருக்கிருர்கள். சில வருஷங்களுக் கொரு முறை இதனைப் பொது மக்கள் தரிசிப்பதற்காக வெளியில் காட்சியாக வைப்பார்கள். இது பெருந் திருநாளாக விருக்கும். இந்த மகானின் உடலைத் தரிசிக்க, இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் ஏராளமான மக்கள் திரண்டு வருவார்கள். இந்த மகானின் சுண்டு விரலை மட்டும் தனியாக ஒரு கண்ணுடிக் குழாயில் வைத்து மக்கள் வணங்குகிருர்கள். இந்தச் சுண்டு விரலை, சாதாரண நாட்களிலும் எல்லோரும் தரிசிக்கலாம்.

இந்த மடத்தின் தோற்றம் மிகவும் கம்பீர மானது. பெரிய அரண்மனையைப் போல் விசால மானது. மடம் முழுவதும் பாதிரிமார்களாலேயே கட்டப் பெற்றது. இங்கே உள்ள சித்திர வேலைப் பாடுகள் மிக உயர்ந்த முறையில் அமைந்திருக்கின் றன. கோவாவில் இன்று தினமும் கிறிஸ்துவர் களுக்கு — அதிலும் கத்தோலிக்கர்களுக்குத்தான் செல்வாக்கு அதிகம். கிறிஸ்துவர்களை விட ஹிந்துக் கள் அதிகமா யிருந்தபோதிலும், ஹிந்துக்களுக்கு அரசாங்கத்தில் போதுமான உரிமையில்லை; சலுகை யெல்லாம் கிறிஸ்துவர்களுக்குத்தான். இதனால்தான் கோவாவில் ஹிந்து - கிறிஸ்துவப் பிரச்சினை மிகப் பெரிதாக வளர்ந்திருக்கிறது.

கோவானியப் பெண்கள் பொதுவாக ஆயாள் வேலைக்குத் தகுதியானவர்கள்; நல்ல தேகக்கட் டுடையவர்கள். இவர்களில் சிலர் சுருட்டுக் குடிப் பார்கள். பாதி குடித்த சுருட்டை அணைத்துவிட்டு, அதைக் கூந்தலில் சொருகிக் கொள்வார்கள். நமது நாட்டில் பூ வைத்துக் கொள்வது போல, கூந்தலில் அவர்கள் சுருட்டு வைத்துக் கொள்கிறார்கள்!

கோவாவிலுள்ள ரெயில்வே ஸ்டேஷன்களில் பெரும்பாலும் பெண் போர்ட்டர்களைப் பார்க்க லாம்.

கோவா எல்லா வகையிலும் மிகச் சிறிய நாடு. தங்கள் நாட்டை, போர்ச்சுகீசியர்களிட மிருந்து விடுவித்துக்கொள்ள வேண்டுமென்று கோவானியர் கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். சுதந் திர இந்தியாவுடன் தாங்கள் ஐக்கிய மாவதில்தான் தங்கள் நாட்டுக்குப் பிரகாசமான எதிர்காலம் உண்

டாகுமென்று கோவானியர்கள் உணரத் தொடங்கி விட்டார்கள். அவ்வாறு நேருமானால், நமது நாட்டிலே உடுப்பிக் காப்பிக் கிளப்புகள் குறைந்து, கோவானியக் காப்பிக் கிளப்புகள்தான் அதிகமாகி விடும்!

## 10. செஞ்சிப் பிரயாணம்

சென்னையிலிருந்து செஞ்சிக்குச் சுமார் 93 மைல்கள் தான். ரெயிலில் செல்வதானால் திண்டிவனம் வரைதான் செல்ல முடியும். அப்புறம் பதினேழு மைல் பஸ்ஸிலோ அல்லது தனி மோட்டாரிலோ செல்லவேண்டும்.

செஞ்சியை நோக்கிச் செல்லும்பொழுது—நாம் சரித்திரத்தை நோக்கியே செல்கிறோம். தேசிங்கு ராஜா ஐந்து வயதில் குதிரையைப் பிடித்து அடக்கினானோ இல்லையோ, அது நமக்குத் தெரியாது ; ஆனால் அவன் தன்னுடைய பலமான கோட்டையிலிருந்து கொண்டு பல்லாயிரக் கணக்கான மக்களை அடக்கி யாண்டிருக்கிறான் என்பது மட்டும் உண்மை.

செஞ்சி நகரம் ஒரு காலத்தில் சீர்பெற்று விளங்கியது. ஆனால், இன்று அது ஒரு சிறு கிராமம். செஞ்சித் தாலூகா தென்னாற்காட்டைச் சேர்ந்தது. தாலூகாவின் தலை நகர் செஞ்சிக் கிராமந்தான்.

இத்தகைய சரித்திரக் கோட்டைகளில் வழக்கமாயுள்ள தாலூகாக்கச்சேரி, மாஜிஸ்ட்ரேட் கோர்ட் முதலியவைகள்தான் அங்கே காணப்படுகின்றன. அந்த ஊரிலேயே வசதியான நல்ல கட்டிடம் ஆற்றங்கரையி லமைந்துள்ள முசாபரி பங்களாத்தான். செஞ்சிக் கோட்டையில் ஏறிப் பார்ப்பதற்காகச்

சென்னையிலிருந்து நாங்கள் மூன்று நண்பர்கள் புறப்பட்டோம்.

எங்கள் மோட்டார் செங்கற்பட்டு ஸ்டேஷனை அடைந்ததும், எங்களை யறியாமலே பசி உண்டா யிற்று. செங்கற்பட்டு ஸ்டேஷனை விட்டால், வேறு நல்ல இட்டலி வழியில் எங்கே கிடைக்கப்போகிறது? ஸ்டேஷனிலுள்ள ஹோட்டலுக்குச் சென்றோம். என்ன ஆச்சரியம்! பிராம்மணர் சாப்பிடுமிடம்—பிராம்மணரல்லாதார் சாப்பிடுமிடம் என்ற போர்டு களைக் காணவே முடியவில்லை. அவைகளெல்லாம் எங்கே சென்று மறைந்தன? எல்லோரும் எங்கே வேண்டுமானாலும் சாப்பிடலாமாம். நல்ல காலம்! புதிய இந்தியா இப்பொழுதுதான் உதயமாகிறது! 'பெரியார்' ராமசாமி நாய்க்கர் தமது வாழ்க்கை யிலேயே செய்த நல்ல காரியம் இது ஒன்றுதான் போலும்!

திண்டிவனம் வரையில் ரோடு பாதகமில்லை; அப்புறம் மோசமாக இருக்கிறது. செஞ்சியை அடைந்ததும் நேராக முசாபரி பங்களாவுக்குச் சென்றோம்.

முசாபரி பங்களா 'வாச்மென்' முருகேசம் பிள்ளை பதினைறு வருஷங்களாக அங்கே வேலை பார்க் கிறார். ஆனல் அவருடைய சம்பளம் மட்டும் ரூபாய் பன்னிரண்டிலிருந்து உயரவே யில்லை.

முருகேசம் பிள்ளையைக் கூப்பிடுவதென்றால், உண்மையிலேயே கஷ்டந்தான். முருகேசம் பிள்ளை யைக் கூப்பிட்ட உடனே "ஏன்?" என்ற சத்தம் கேட்டுவிடும். ஆனல், பத்து நிமிஷம் வரை அவர் உங்கள் முன் வரமாட்டார். நீங்கள் கூப்பிட்ட

உடனேயே அவர் தமது பழைய கோட்டை மாட்டிக்கொண்டு தலைப்பாகையை வரிந்து வரிந்து கட்டிக் கொள்வதற்கு, குறைந்தது பத்து நிமிஷமாவது பிடிக்கும். இந்தக் கஷ்டத்தை உத்தேசித்து நாங்கள் அவரைக் கூப்பிடுவதே யில்லை. ஏதாவது அவரிடம் கேட்க வேண்டுமானால், நாங்களே அவர் இருக்குமிடத்துக்குச் சென்று விடுவோம். "செஞ்சியைப் பற்றி ஏதாவது புத்தகம் இருக்கிறதா? இங்கே கிடைக்குமா?" என்று முருகேசம் பிள்ளையைக் கேட்டோம். அவர் தேசிங்கு ராஜன் பாட்டுப் புத்தகமொன்றைக் கொண்டு வந்து கொடுத்தார். அந்தப் புத்தகத்தின் அட்டையில் "இது ராமாயியின் புத்தகம். யாரும் எடுத்துக்கொண்டு போனால் போலீஸில் சார்ச் செய்யப்படும்" என்று எழுதியிருந்தது! புத்தகத்தைப் பிரித்து எனது நண்பர் பின் வருமாறு படித்தார் :

> "குதிரை பிறந்தது வெள்ளிக்கிழமை ராஜா தேசிங்கு !
> யானை பிறந்தது வெள்ளிக்கிழமை ராஜா தேசிங்கு !
> நீயும் பிறந்தது வெள்ளிக்கிழமை ராஜா தேசிங்கு !

இதைப் படித்ததும் எனது நண்பருக்கும் 'கவிதா சக்தி' பிறந்துவிட்டது. உடனே அவர்

> "நானும் பிறந்தது வெள்ளிக்கிழமை ராஜா தேசிங்கு"

என்று பாட ஆரம்பித்துவிட்டார்.

இந்தப் புத்தகத்தை அரைகுறையாகப் படித்து முடித்ததும், "வேறு புத்தகம் ஏதாவது இருக்கிறதா?" என்று முருகேசம் பிள்ளையைக் கேட்டோம். அவர் "முசாபரி பங்களாவில் ஒரே ஒரு புத்தகம்தான் இருக்கிறது" என்று கூறி, 'பைபிளை'க்

கொண்டுவந்து கொடுத்தார். "அட கடவுளே, பாதிரிகள்தான் கிறிஸ்துவ மதப் பிரசாரம் செய்கிறார்கள். நாசமாய்ப் போன ஜில்லா போர்டுமா இந்தப் பிரசாரம் செய்ய வேண்டும்!" என்றார் நண்பர். 'நாசமாய்ப் போன' என்பது இந்த நண்பர் அடிக்கடி கூறும் அர்த்த மில்லாத ஒரு வார்த்தை.

அன்று மாலையில் கோட்டையைப் பார்க்கச் சென்றோம். முதலாவது ராஜகிரி. இது ஒரு பிரம் மாண்டமான கோட்டை. ஒருகாலத்தில் சேனைகள் அணி வகுத்து நின்ற இடங்கள், இப்பொழுது வயல் காடுகளாக இருக்கின்றன. சில சமயங்களில் கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் அங்கே மனிதர்களையே காணமுடியாது. நெளிந்தும் வளைந்தும் செல்லும் பாதைகள் வழியாகப் பல வாயிற்படிகளைக் கடந்து ராஜகிரியின் அடிவாரம் போய்ச் சேர்ந்தோம்.

முதன் முதலாக ஆறுமாடியுள்ள அழகிய கட்டிட மொன்றைக் கண்டோம். இதனருகே ஒரு பெரிய குதிரை லாயம் இருக்கிறது. 'அரசர் ஸ்நானம் செய்த இடம்', 'அரசி ஸ்நானம் செய்த இடம்' என்று சில இடங்களைப்பற்றி நாங்களே நினைத்துக் கொண்டோம்.

அழகிய குளம். அதன் நாற்புறமும் மண்டபம். இந்த மண்டபம், பூமி மட்டத்திலேயே இருக்கிறது. மண்டபத்திற்குக் கீழே, பூமியைக் குடைந்தாற் போல் ஒரு வழி இருக்கிறது. அந்த வழியில் சென்றால்தான் குளத்தை அடையலாம்.

ஏராளமான களஞ்சியங்கள், தான்யங்களைச் சேகரித்து வைப்பதற்காகக் கட்டப் பெற்றிருக்கின்

றன. பிரம்மாண்டமான இந்தக் களஞ்சியங்களில் ஒரு தூண் கூடக் கிடையாது.

உடற் பயிற்சி மண்டபமும் மலை அடி வாரத்திலேயே இருக்கிறது.

நாங்கள் மூவரும் ராஜகிரியில் ஏறுவதற்காக முயற்சித்தோம். வழி நெடுக, சுமார் பத்து மண்டபங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மண்டபத்திலும் தங்கி இளைப்பாறிச் செல்லலாம்.

படிகளில் ஏறுவது மிகவும் கஷ்டமாக இருந்தது. ஏனெனில், நாங்கள் மூவரும் ஏறக்குறைய 'பெரிய மனிதர்கள்.' எங்களில் மிகப் பெரிய மனிதர் சுமார் 160 பவுண்டுதான் எடை யுள்ளவர்.

மூன்றுவது மண்டபம் வந்த உடனேயே நான் உட்கார ஆரம்பித்து விட்டேன். என்னை உற்சாகப் படுத்திக் கொண்டே மற்ற இரு நண்பர்களும் உட்கார்ந்து விட்டார்கள்.

அப்பொழுதுதான் மலையிலிருந்து காவற்காரன் இறங்கி வந்துகொண்டிருந்தான். அவனைக் கண்டதும் எனது நண்பர் "ஏனப்பா, உச்சிக்கு ஏறி இறங்குவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்?" என்று கேட்டார். அதற்கு அவன் "சுமார் ஒன்றரை மணி நேரம் பிடிக்கும்" என்றுன். எனது நண்பர் "சரி; போவதற்கு முக்கால் மணி, வருவதற்கு முக்கால் மணி" என்று கணக்குப் போட்டுக் கூறினர். உடனே காவற்காரன் "இல்லீங்கோ; போவதற்கு ஒரு மணி வருவதற்கு அரை மணியாகும்" என்றுன். எனது நண்பரின் கணக்கிலே பிசகில்லை. ஆனல் காவற்காரன் கூறியதுதான் உண்மை. கடைசியாக, மலையின் உச்சியை அடைந்தோம். ரங்கநாதர் கோவில், மணிக்

கூண்டு, தேசிங்கு ராஜா தர்பார் நடத்திய இடம், பொக்கிஷ சாலை முதலியவைகளைப் பார்த்தோம்.

மறுநாள் காலையில் கிருஷ்ணகிரிக்குச் சென்றோம். இது மிகவும் சிறிய மலை. சுமார் முந்நூற்றெண்பது படிகள்தான். ஆனால் இதில் ஏறி இறங்குவதற்குள் முழங்கால்கள் முறிந்து விடும்போல் தோன்றியது.

செங்குத்தான இம் மலையின் மேல் சில ஆலயங்களும், களஞ்சியங்களும், அரச மண்டபங்களும் இருக்கின்றன. உச்சியிலுள்ள மண்டபம் மிக அழகானது. ஆனால் இங்கேவரும் மனிதப் 'பிராணிகள்', இந்த அழகிய மண்டபத்தில் தங்கள் பெயர்களைக் கரியாலும் மற்றும் பலவகையாலும் எழுதி ஆபாசப் படுத்தியிருக்கின்றன.

மூன்றாவது மலை ரங்ககிரி. ஆனால் இம் முறை அங்கே செல்ல எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்க வில்லை. ரங்ககிரி, செஞ்சியிலிருந்து சுமார் இரண்டரை மைல் தூரத்திலுள்ள சிங்கவரத்தில் இருக்கிறது. இம் மலைக் கோவிலில் ரங்கநாதர் பள்ளி கொண்டிருக்கிறார்.

ஆனால், இந்த ரங்கநாதர் மற்ற ரங்கநாதர்களைப் போல் இல்லாமல் ஆகாயத்தை நோக்கிக்கொண்டிருக்கிறார். தேசிங்கு ராஜா சண்டைக்குச் செல்வதற்காக உத்தரவு கேட்க வந்ததாகவும், அதற்கு ரங்கநாதர் சம்மத மில்லாமல் தலையைத் திருப்பி வைத்துக் கொண்டதாகவும் அங்குள்ளவர்கள் கூறுகிறார்கள். அது எப்படியானாலும் சரி; ஒரே கல்லில் செதுக்கப் பெற்ற ரங்கநாதரின் பிரம்மாண்டமான அந்தத் 'திருவுருவம்' பார்க்கத் தக்கது.

செஞ்சிக்குச் செல்லுகிறவர்களுக்கு, ஒரே ஒரு வார்த்தை. நீங்கள் அங்கே சென்றதும் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்; அங்கேயிருக்கும் இரண்டொரு ஹோட்டல்களில் முன்னதாகவே சொல்லிவைத்து விடுங்கள். இல்லையானால் விநோதமான 'பரங்கிக்காய் வத்தல் குழம்பு' தான் உங்களுக்குக் கிடைக்கும்.

---

# 11. தரங்கம்பாடி

மாயவரத்திலிருந்து சுமார் 18 மைல். ஆடி அசைந்து செல்லும் ரெயில். இரண்டேமுக்கால் மணி நேரத்தில் தரங்கம்பாடி ரெயில்வே ஸ்டேஷனை அடைகிறோம்.

ஸ்டேஷனிலிருந்து அரை மைல் தூரத்தில் பெரிய கோட்டை. இக் கோட்டைக்குள் இருக்கும் ஊர் தான் தரங்கம்பாடி. கோட்டையை அடைவதற்குள் இரண்டு ஆறுகளைக் கடக்க வேண்டும். ஒன்று உப்பனாறு. பெயரிலிருந்தே தண்ணீர் எப்படி இருக்கும் என்பதை அறியலாம். மற்றொன்று பக்கிங்ஹாம் கால்வாய். சென்னையில் இருக்கிறதே அதே நாற்றம் வாய்ந்த பக்கிங்ஹாம் கால்வாய்தான் இது. இந்த இரண்டு ஆறுகளும் தரங்கம்பாடிக்கு அருகே சங்கம மாகின்றன.

கோட்டைக்குள்ளே ஒரு கோட்டை. குறுக்கிலும் நெடுக்கிலும் ஓடும் அழகான வீதிகள். பாழடைந்த பெரிய கட்டிடங்கள், ஒரு மசூதி, இரண்டு கோவில்கள், மூன்று சர்ச்சுகள், சுமார் 500 வீடுகள், இதுதான் தரங்கம்பாடி.

பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜெர்மன் பாதிரிகள் இங்கே வந்தார்கள். இன்னும் அவர்களுடைய பள்ளிக்கூடங்களிலும், மதமாற்றும் கருவிகளும் இங்கே யிருக்கின்றன. முதன் முதலாக இந்த ஊரைச் சீர்படுத்தி அரசாண்டது டேனிஷ்காரர்

கள். அந்தக் காலத்தில் கட்டப்பட்ட பிரம்மாண்டமான கட்டிடங்களில் சில இன்னும் நல்ல நிலைமையில் இருக்கின்றன. அந்தக் கட்டிடங்களில் டென்மார்க்கின் சிற்பங்கள் காணப்படுகின்றன.

ராஜா வீதி, ராணி வீதி, அட்மிரல் வீதி, பிரின்ஸ் வார்கன் முதலியன வீதிகளின் பெயர்கள். இந்தக் கோட்டை நகருக்கு மூன்றுபுறந்தான் வாயில்கள். ஒருபுறம் துறைமுகம். துறைமுகத்தின் அருகில் சிறிய கோட்டை. இந்தச் சிறிய கோட்டைக்கு அருகே பெரிய மைதானம். மைதானத்தின் மறுபுறத்தில் ஜட்ஜி பங்களா. அது இப்பொழுது நாடார் பங்களாவாக இருக்கிறது.

மைதானத்தின் மற்ருெரு புறத்தில் மேனிக் என்ற ஜெர்மானியர் வசிக்கிருர். இவருக்கு வயது 87. இவ்வூருக்கு வந்து 52 வருஷங்கள் ஆகின்றன. இத்தனை வருஷங்கள் ஆகியும் இவருக்குத் தமிழ் சரியாகப் பேச வராது. ஒருமுறை தம் வேலைக்காரனைக் கூப்பிட்டு, தம் வீட்டுக்குப் போய் அம்மாளிடம் இரண்டு சுருட்டுகள் வாங்கிவரும்படி கூறினர். அதற்குக் கீழ்க்கண்டவாறு வேலைக்காரனிடம் கூறினராம் :—
"நான் சொல்லி, நீ சொல்லி, அம்மா சொல்லி, இங்கே போருன் ஒருவன், திரும்பி வருருன் ஒருவன்."

மேனிக் துரைக்கு இந்தியர்களிடம் ரொம்ப அபிமானம் உண்டு. அதை எல்லா வகையிலும் காட்டிக் கொள்வார். பிறப்பில் ஜெர்மானியராக இருந்தாலும், சென்ற யுத்தத்தில் பிரிட்டிஷ் பிரஜையாக மாறிவிட்டார்.

தரங்கம்பாடியில் பொதுவாக பென்ஷன் வாங்குபவர்களும் செம்படவர்களும்தான் அதிகம். இந்தச்

செம்படவர்கள் கோட்டைக்கருகே வசிக்கிறார்கள். மீன் பிடிப்பதிலும் சுருட்டுப் பிடிப்பதிலும் இவர்கள் கெட்டிக்காரர்கள். இவர்கள் இருக்கும் குடிசைகளுக்குப் பட்டணம் என்று பெயர். இவர்களுக்குப் பட்டணத்தார் என்று பெயர்.

இந்தப் பட்டணத்தாரின் ஜனத்தொகை சுமார் ஆயிரம். இங்கே ஒரு பள்ளிக்கூடமும் கோயிலும் உண்டு. சில பட்டணத்தார்களுக்கு, ஒரு சமயம் தெய்வ பக்தி அதிகமாகிவிட்டது. உடனே அவர்கள் இரவில் கோவிலுக்குச் சென்று விக்ரகத்தைப் பெயர்த்து, அதற்கடியிலிருந்த பொன்னை, சுவாமியின் பிரசாதமாக எடுத்துச் சென்றார்களாம்!

பட்டணத்தாரின் கல்யாணமே அலாதியானது. கல்யாணத்தில் மாப்பிள்ளையையும் பெண்ணையும்விட, புரோகிதருக்குத்தான் கஷ்டம் அதிகம். மணமகளுக்குத் தாலி கட்டி முடிந்ததும், மணமகன் கையையும் மணமகள் கையையும் ஒன்றாகச் சேர்த்துவைக்க வேண்டியவர் புரோகிதர். மணப் பெண், கையைப் பின்புறமாக வைத்துக்கொள்வாள். புரோகிதர் பலவந்தமாக, பெண்ணின் கையைப் பிடித்து மாப்பிள்ளையின் கையோடு சேர்க்க வேண்டும். ஒரு முறை ஒரு மணப்பெண் புரோகிதரின் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, அதை நன்றாகக் கடித்துவிட்டாள். புரோகிதர், மணப் பெண்ணின் கையை நன்றாகக் கிள்ளி, தம்மை விடுவித்துக் கொண்டார்.

அம்மி மிதித்தல் ஒரு சடங்கு. மாப்பிள்ளை பெண்ணின் காலைத் தூக்கி அம்மியின் மீது வைக்க வேண்டும். கல்யாண வீட்டிலுள்ள ஆண்களுக்கும்

பெண்களுக்கும் இதில் சண்டை வந்துவிடும். "தூக்கி வை" என்பார்கள் பெண்கள். "தூக்காதே" என்பார்கள் ஆண்கள்.

'தூக்கி வை'
'தூக்காதே'
'தூக்கி வை'
'தூக்காதே'

என்ற பெரும் இரைச்சல் உண்டாகும். சில சமயங்களில் சண்டையும் வந்துவிடும். சில சமயங்களில் புரோகிதரே பெண்ணின் காலைத் தூக்கி வைக்க வேண்டும். இவ்வளவு கஷ்டப்பட்டும், புரோகிதருக்குக் கிடைப்பது ஏழு ரூபாய்தான். இந்தத் தொழிலைவிட ஏ. ஆர். பி. யில் சேருவது நல்லது என்று புரோகிதர் கருதுகிறாராம்.

வாழ்ந்து முறிந்துபோன ஊர் தரங்கம்பாடி. இங்கே வாழ்ந்து வதங்கியவர்கள் (பென்ஷன் வாங்குபவர்கள்) அதிகம். இவர்கள் ஆப்பிரிக்கா, மலேயா, மோரீஸ் போன்ற வெளி நாடுகளிலே சம்பாதித்தவர்கள். அந்தக் காலத்திலே பணத்தைத் தண்ணீர் போல வாரி இறைத்தவர்கள். இப்பொழுது காலணா செலவிடவும் கணக்குப் பார்க்கிறார்கள். யாராவது வெளியூரார் போய்விட்டால், பேசிப் பேசிப் பிராணனை வாங்கி விடுவார்கள்.

இவ்வூர் இளைஞர்களுக்கு படிப்பு, அரசியல் இவைகளைவிட விளையாட்டுக்களிலே அதிகப் பிரியம். டென்னிஸ், புட்பால், பாட்மிண்டன் முதலியன அதிகம்.

ஒரு காலத்திலே தரங்கம்பாடித் திராக்ஷைகள் மிகப் பேர் பெற்றிருந்தன. இப்பொழுது மருந்துக்குக்கூட ஒன்றைப் பார்ப்பது கஷ்டம்.

தரங்கம்பாடியில் ஒரே ஒரு பாக்டரி. அதுவும் சோடா பாக்டரி. சாயா வந்த பிறகு, சோடா வியாபாரம் படுத்துவிட்டது.

பரம்பரையாகக் காப்பி கிளப் நடத்தும் ஐயர் ஒருவர் இருக்கிறார். இவர் பழைய காலத்து மெட்ரிகுலேஷன். இவருடைய பலகாரத்தைவிட, பேச்சு இனிமையாக இருக்கும்.

தென்னிந்தியாவிலுள்ள சிறந்த சுகவாஸ ஸ்தலங்களில் தரங்கம்பாடி குறிப்பிடத்தக்கது. வெயில் காலத்தில் இங்கு நல்ல ஆரோக்கியமான காற்று. இவ்வூர் மக்களின் ஏழ்மை, சுகவாசிகளின் செலவைக் குறைத்துவிடுகிறது.

சமுத்திரக் கரையின் ஓரத்திலுள்ள மணற் பரப்பில் அருமையான ஊற்று நீர் கிடைக்கிறது.

மாசிலாமணி கோயில், சமுத்திரக்கரை ஓரத்திலிருக்கிறது. கொஞ்ச காலத்தில் கோயிலும் சமுத்திரமும் ஒன்றாகிவிடலாம். மாசிலாமணிக் கடவுளுக்கு நூற்றுக் கணக்கான வேலி நிலமிருந்தும், அவரைக் கவனிப்பார் யாருமில்லை. கடவுள் பெரியவர். அவர் தம் குறைகளை யாரிடமும் சொல்லமாட்டார்.

தரங்கம்பாடியைப் பற்றி நினைக்கும்பொழுது கொம்பில்லாத மாடுகளும், கூரையில்லாத வீடுகளுமே ஞாபகத்துக்கு வருகின்றன.

## 12. குமரிமுனை

'நீலத் திரைக் கடலோரத்திலே நின்று நித்தம் தவம் செய் குமரியை'த் தரிசிப்பதற்காக, சென்னையிலிருந்து பிரயாணமானேன்.

சென்னையிலிருந்து திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் ரெயில் புறப்பட்ட பொழுது, எஞ்ஜினைத் தவிர, பத்து வண்டிகளுக்கு மேல் இணைக்கப்பட் டிருந்தன. 512 மைல் பிரயாணத்துக்கப்பால், திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் திருவனந்தபுரத்தையே அடைந்தபொழுது, எஞ்ஜினைத் தவிர நாலு வண்டிகள்தான் மிச்சம்.

திருவனந்தபுரம் ரெயில்வே ஸ்டேஷனின் மேல் மாடியில் பிரயாணிகள் தங்குவதற்காகச் சிறந்த முறையில் சௌகரியங்கள் செய்திருக்கிறார்கள். ஸ்டேஷனுக் கெதிரே மிக அழகான பார்க் ஒன்று அமைத்திருக்கிறார்கள். என் அருகே நின்ற வேலைக்காரன், அந்தப் 'பார்க்' அமைக்கப் பெற்ற வரலாற்றைக் கூறினான்.

பார்க் அமைப்பதற்குமுன் அந்த இடம் மைதானமாக இருந்ததாம். சமஸ்தானக் காங்கிரஸ்காரர்கள் அடிக்கடி இங்கே பொதுக் கூட்டங்கள் நடத்திக் கிளர்ச்சி செய்தார்களாம். இந்தக் காங்கிரஸ்காரர்களின் கூட்டங்களைத் தடுப்பதற்காகவே, அந்த மைதானத்தைச் சர்க்கார் அழகான 'பார்க்' ஆக்கி விட்டார்களாம்! இந்த வரலாறு உண்மையாக

இருக்குமானால், சமஸ்தான காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு யோசனை கூற விரும்புகிறேன். "எந்தந்த இடங்களில் பார்க் அமைக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அந்தந்த இடங்களில் பொதுக் கூட்டங்கள் நடத்த ஆரம்பித்துவிடுங்கள்" என்பதுதான் அந்த யோசனை.

திருவனந்தபுரத்தில் தங்கிய இரண்டு நாட்களில் மூன்று இடங்கள் என் மனதைக் கவர்ந்தன: ஸ்ரீபத்மநாபஸ்வாமியின் ஆலயம், சித்திர சாலை, மீன் காட்சி சாலை (Aquarium).

ஆலயத் திறப்புச் சம்பந்தமாக, ரெயிலில் பிரயாணம் செய்த ஒரு நம்பூதிரிப் பிராமணரிடம் பேசிக் கொண்டிருந்தேன். "அதைப்பற்றி எங்களுக்கு என்ன கவலை? பிராமணர்தான் எப்பொழுதும் கோவிலுக்குப் போவதே யில்லையே! ஒவ்வொரு பிராமணர் வீட்டிலும் கோயில் உண்டு" என்றார் நம்பூதிரி. திருவாங்கூரில் ஆலயங்களை இந்து மதத்தினர் அனைவருக்கும் திறந்து விட்டது மிகவும் பாராட்டத்தக்க ஒரு நல்ல காரியம். சமஸ்தானத்தில் கிறிஸ்துவர்களின் செல்வாக்கு அதிகமாகாம விருப்பதற்காகத் தான் ஆலயங்களைத் திறந்து விட்டதாகவும், இது ஓர் அரசியல் தந்திரம் என்றும் சிலர் கூறுகிறார்கள். பாராட்டத்தக்க நல்ல காரியத்தைச் செய்யும் பொழுது, அது எந்த நோக்கத்துடன் செய்யப்பட்டது என்று விவாதிப்பது பெருந் தன்மையாகாது.

உள்ளத்தைக் கவரும் ஓவியங்கள் நிறைந்தது திருவனந்தபுரம் சித்திரசாலை. ராஜா ரவிவர்மாவின் உயிர் ஓவியங்களை அங்கே நாள் முழுதும் பார்த்து

அனுபவிக்கலாம். பாட புத்தகங்களிலே நாம் பார்த்திருக்கக் கூடிய அன்னமும் தமயந்தியும் என்ற படம் இங்கே என்ன அழகாக இருக்கிறது! சகுந்தலையின் படத்தைக் கண்குளிரப் பார்த்து மகிழலாம். சமீபத்தில் 'சகுந்தலை' என்ற சினிமாப் படத்தில் சகுந்தலையை ஹாவாய்த் தேசத்துப் பெண்ணைப் போலச் சிங்காரித் திருந்தார்கள். அந்த டைரக்டரைத் திருவனந்தபுரத்துக்கு அனுப்பி, இந்தப் படத்தைப் பார்க்கும்படி செய்திருந்தால், சினிமாவின் 'சகுந்தலை' இந்தியச் சகுந்தலையாகவே தோற்றமளித்திருப்பாள்.

கீழ் நாடுகளிலேயே மிகச் சிறந்த மீன் காட்சிசாலை திருவனந்தபுரத்தில் உள்ளதுதான் என்று பெருமை யடித்துக் கொள்கிறார்கள். அதைப் பார்த்ததும், 'இது உண்மை: வெறும் பிரசாரமல்ல' என்று நமக்குத் தெரிகிறது.

திருவனந்தபுரத்தில் உள்ள பெண் போலீஸ் படையைப்பற்றிக் கேள்விப் பட்டேன். இந்தப் படையிலுள்ள ஒரு போலீஸ்காரியை யாவது காண வேண்டு மென்று எனக்கு ஆவல். ஆனால், முடியவில்லை. முக்கியமான விசேஷங்களுக்கும், வரவேற்பு, அணிவகுப்புப் போன்ற வைபவங்களுக்கும்தான் இந்தப் பெண் போலீஸ்காரிகள் வெளியே வருவார்களாம். ஒன்றுமட்டும் நிச்சயமாகத் தெரிந்தது. இந்தப் போலீஸ்காரிகளைப் பாதுகாக்க, போலீஸ்காரர்கள் யாரும் நியமிக்கப்பட வில்லையாம்.

திருவாங்கூர் நாணயம் என்ன தெரியுமா? 'சக்கரம்' என்பதுதான். ஒரு ரூபாய்க்கு 28 சக்கரம். ஒரு சக்கரத்துக்குக் காப்பி சாப்பிடலாம். அரைச்

சக்கரத்துக்கு டீ சாப்பிடலாம். சில இடங்களிலே ஒரு சக்கரத்துக்கு சினிமாக்கூடப் பார்க்கலாம்!

திருவனந்தபுரத்தி லிருந்து இயற்கை எழில் நிறைந்த சாலை வழியாக நாற்பது மைல் தூரத்தி லிருக்கிறது நாகர்கோயில். இவ்வூர்க் கோயில் ஒரு காலத்தில் ஜைனர்களின் கையி லிருந்ததாம். நாகர் கோயிலை City of Hospitals (ஆஸ்பத்திரிகள் நிறைந்த நகரம்) என்று கூறலாம். எங்கே நோக்கினும் ஆஸ்பத்திரிகள்—அதுவும் கிறிஸ்துவ மிஷன் ஆஸ்பத் திரிகள்!

இந்த நகருக்கருகே யுள்ள புத்தேரி என்னும் சிற்றூரில் தமிழ்க் கவி ஸ்ரீ தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் வசிக்கிறார்கள். பிள்ளையவர்களைச் சந்திக் கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. பிள்ளையவர் களின் மாசற்ற அன்பும், அடக்கம் நிறைந்த பேச் சும் மனமுவந்த உபசரிப்பும் என்னுள்ளத்தைக் கவர்ந்தன.

ஸ்ரீ தேசிகவிநாயகம் பிள்ளை யவர்களின் பாடல் களைத் தமிழ் நாடும் தமிழ் மக்களும் நன்கறிவார் கள். இவருடைய பாட்டுக்களைக் கண்டு யாரும் பயப்பட வேண்டியதில்லை. குழந்தைகளும் புரிந்து கொள்ளும்படியான எளிய நடையில் பாக்கள் ஆக்குவதிலே ஸ்ரீ பிள்ளையவர்கள் சிறந்து விளங்கு கிறார்கள்.

நாகர்கோயிலி லிருந்து பன்னிரண்டு மைல் தூரத்தி லிருக்கிறது கன்யா குமரி. முப்புறமும் கடல் சூழ்ந்த குமரி முனையில் நின்று, எப்பக்கம் திரும்பி னும் ஓர் இனிய உணர்ச்சி எழுகிறது. "அதோ, அங்கே யிருக்கும் பாறைக்கு நீந்திச் சென்று, அப்

பாறைமீதுதான் சுவாமி விவேகானந்தர் தவம் செய்தார். இங்கேதான் மகாத்மா நீராடினார். பழம் பெருமை கொண்ட எனது தாய் நாட்டின் எல்லை இது" என்று நினைக்கும்பொழுது, எந்த இந்தியன் தான் மனம் பூரிக்காமலிருக்க முடியும்? கன்யா குமரி, மூன்று அல்லது நான்கு ஆயிரம் ஜனத் தொகை கொண்ட சிறு கிராமம். குமரி முனையிலே ஒரு மண்டபம் இருக்கிறது. மண்டபத்தி லிருந்து இறங்கினால் சௌகரியமாக நீராடுவதற்கு வசதிகள் இருக்கின்றன.

மண்டபத்தி லிருந்து பார்த்தால், சூர்ய உதயமும் சூர்ய அஸ்தமனமும் தெரியும். மண்டபத்துக்கு அருகேயுள்ள கடற்கரையில், பன்னிற வர்ணமுள்ள மணல்வகைகள் காட்சி யளிக்கின்றன. வான வில்லில் எத்தனை வர்ணங்களுண்டோ, அத்தனை வர்ணங்களை இம் மணல் வகைகளில் பார்க்கலாம். கடற்கரையின் ஓரத்தில் திருவாங்கூர் மகாராஜாவின் பங்களா, முசாபரி பங்களா, கேப் ஹோட்டல் முதலிய கட்டிடங்கள் அமைக்கப்பெற் றிருக்கின்றன. இவை தவிர, ஏராளமான சத்திரங்களும் அங்கே இருக்கின்றன.

ஊருக்கு மத்தியிலே விவேகானந்த வாசகசாலை ஒன்று இருக்கிறது. இதை ஸ்ரீ பரமேசுவரம் பிள்ளையும் ஸ்ரீ ராஜனும் வெகு நாளாகத் திறம்பட நடத்தி வருகிறார்கள். கன்யா குமரிக்கு வரும் யாத்ரீகர்கள் கொடுக்கும் அன்பளிப்பான பணத்தைக் கொண்டு தான், இதை அவர்கள் அபிவிருத்தி செய்துவருகிறார்கள். சுவாமி விவேகானந்தரின் பெயரால் இவ் வாசகசாலை அமைக்கப் பெற்றிருப்பதால், இங்கே

வருகிற வங்காளிகள் நிறையப் பொருளுதவி செய்கிறார்களாம்.

மகாத்மாஜி ஒரு முறை இவ் வாசகசாலைக்கு விஜயம் செய்தார். அவ் வரலாற்றை, வாசகசாலைக் காரியதரிசி பின்வருமாறு கூறினர் :—" காந்திஜியை எங்கள் வாசகசாலைக்கு விஜயம் செய்யும்படி கேட்டுக் கொண்டோம். மறுநாள் காலையில் உலாவச் செல்லும்போது வருவதாக, அவர் வாக்களித்தார். எங்கள் வாசகசாலைக்கு அடுத்த கட்டிடம் 'விவேகானந்த காப்பி கிளப்'. காந்திஜி தவறுதலாகக் காப்பிக் கிளப்புக்குள் நுழைந்து விட்டார்! காப்பிக் கிளப் காரருக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை. 'காந்திஜி ஆட்டுப்பால்தானே சாப்பிடுவார்; காப்பி சாப்பிடமாட்டாரே!' என்று யோசிக்க ஆரம்பித்தார். அதற்குள்ளாக, காந்திஜி, காப்பி கிளப்பை விட்டு வெளியே வந்து, வாசகசாலையை அடைந்தார்."

விவேகானந்த வாசகசாலைக்கு யார் போனாலும் இந்த வரலாற்றை அந்த வாசகசாலையார் கூறுவார்கள்.

# சக்தி மலர்

XV. D. 21

சக்தி மலர்ப் பதிப்பு நூல்கள் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் ஏற்ற உயரிய நற்கருத்துக்களைத் தெளிவான எளிய நடையில் வெளியிட எழுந்தனவாகும்

1. பிரயாண நினைவுகள்
2. ரோமெய்ன் ரோலந்து
3. உலகில் அழகிய பாரிஸ்
4. பெர்லின் நகரில்
5. ரங்கூன் பிரயாணம்
6. பம்பாயில் கண்டவை
7. ரெயில் பிரயாணம்
8. பீஜப்பூர்
9. கோவா
10. செஞ்சி
11. தரங்கம்பாடி
12. குமரி முனை

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYER LIBRARY

சக்தி காரியாலயம்
காரைக்குடி — மதுரை